# ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்
ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர்: **பி. வீரராகவன்**

வருட சந்தா ரூ. 3 — தனிப்பிரதி அணா 4

மலர் 11 — 1950, மே — இதழ் 5

## மனமில்லையா, பணமில்லையா!

விற்பனை வரி உட்பட சென்னை மாகாணத்தின் வருமானம் சுமார் ரூ. 56 கோடி. சென்னை மாகாணத்தில் வசூலிக்கும் சுமார் 50 கோடி வருமான வரியில் (Income Tax) 42 கோடி இந்திய சர்க்கார் எடுத்துக் கொண்டு, சென்னை அரசாங்கத்திற்கு கொடுப்பது சுமார் ரூ. 8 கோடி. ஆக நமது மாகாணத்தின் வரவு சுமார் ரூ. 64 கோடி. இதில் கல்விக்காக செலவிடப் படுவது சுமார் 10 கோடியென்று கணக்கிடப் படுகிறது.

| 1948—49 | பள்ளிக்கூடங்கள், | படிப்பவர் தொகை |
|---|---|---|
| ஆரம்பக்கல்வி | 37195 | 38, 17, 000 |
| ஸெகண்டரி பள்ளிகள் | 1103 | 5, 21, 000 |
| ஆர்ட்ஸ் காலேஜ் | 89 | 40, 000 |

இந்த 10 கோடி ரூபாயில் ஆரம்பக் கல்விக்கென செலவிடப் படுவது சுமார் 5 கோடி. இங்கிலாந்து, அமெரிக்கா, முதலிய

முன்னேற்ற மடைந்த மேல் நாடுகளில், நாட்டின் வருமானத்தில் சுமார் 50 சதவிகிதத்திற்கு மேல், நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக் செலவிடுகிறார்கள். பாமர நோய் பிடித்துள்ள, 100–க்கு 12 பேர் படித்துள்ள, நமது மாகாணத்தில் 16 சதவிகிதம்தான் கல்விக்காக செலவழிக்கப் படுகிறது. அந்த 16 சதவிகிதத்திலும் 8 சதவிகிதம் தான் அதாவது 5 கோடி ரூபாய் ஆரம்பக் கல்விக்கு செலவிடப் படுகிறது. கல்விக்காக செலவிடப்படும் பணம் நம் மாகாணத்தில் மிக மிகக் குறைவு. குறைந்தது ரூ 20 கோடியாவது கல்விக்காக ஒதுக்கப்பட வேண்டும். அதிலும் ஆரம்பக்கல்விக்கு மட்டும் 15 கோடி ரூபாயாவது ஒதுக்க வேண்டும்.

நமது காங்கிரஸ் தோழர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்ததிலிருந்து அவர்கள் மனமும், எண்ணமும் உயர்தரக்கல்வி, கல்லூரிக்கல்வி இவைகளின் வளர்ச்சிக்காக நாடுகின்றதே யொழிய ஆரம்பக்கல்வியுன் வளர்ச்சிக்காக நாடவேயில்லை. அதற்குக் காரணம் ஆட்சியாளர்கள் ஆரம்பக்கல்வியைப் பற்றி அதிகம் சிந்திக்காதது ஆகும். இன்னும் சுமார் நம் மாகாணத்தில் 35 லக்ஷம் பிள்ளைகள் படிப்பின் வாசனையை அறியாமலிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் கிராமந்தோறும் பாடசாலைகள் தேவை. பாடசாலைகள் தேவை என்றால் அதற்கேற்றபடி இன்னும் சுமார் 1 லக்ஷம் தேர்ச்சிப் பெற்ற ஆசிரியர்கள் தேவை.

இனிமேல் தற்போதுள்ள ஆசிரியர்கள் படும் பாட்டை அறிந்த இளைஞர்கள் ஆசிரியர் பதவிக்கு வர கனவிலும் நினைக்க மாட்டார்கள். ஏற்கனவே பதவியிலுள்ள ஆசிரியர்களோ ஆசிரியர் பதவியிலிருந்து நீங்கி வேறு எதாவது மாதம் 50 ரூபாய் கிடைக்கக் கூடிய கௌரவமான தொழிலைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் நாட்டின் கல்வி வளர்ச்சி இனிவரும்காலத்தில் எந்தப் போக்கில் மக்களை பாமரநோயில் கொண்டு போய் மறுபடியும் ஆழ்த்தி விடுமோவென்று நாம் அஞ்ச வேண்டியதாயிருக்கிறது. இந்த ஆபத்தான நிலையை ஆட்சியாளர்கள் சற்றேனும் உணர்ந்திருப்பதாக தெரியவில்லை. ஆட்சியாளர்கள், 250 ஆதாரக்கல்வி ஆரம்ப பள்ளிகளையும், 36 ஆதார கல்வி பயிற்சி பள்ளிகளையும், 60 ஆரம்பப் பாடசாலைகளுக்கு ஒரு டிப்டி இன்ஸ்பெக்டருமாக அதிகமாக டிப்டி இன்ஸ்பெக்டர்களையும் ஏற்படுத்தியுள்ளதாக அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். இதற்காக பல லக்ஷம் ரூபாய்கள் செலவினத்தில் ஒதுக்கியுள்ளனர். இதுதான் நடந்த மூன்று

ஆண்டுகளாக நமது ஆட்சியாளர்கள் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்காக செய்துள்ள அருமையான திட்டமாகும். மேற்குறித்த திட்டங்களில் பாமரநோய் ஒழிந்து படியாதவர்கள் எண்ணிக்கை நூற்றுக்கு ஐந்து பேர்களாவது குறைவுபடுமா என்பது நமது முக்கியமான கேள்வியாகும்.

நாட்டின் கல்வியை வளர்க்க வழியும் வகையும் தெரியவில்லை என்றாலும், இருக்கும் ஆசிரியர்களை ஒழுங்காக வைத்துக்கொண்டு தொழிலுக்கேற்ற ஊதியமாவது கொடுத்து-இருக்கும் ஆரம்பப் பாடசாலைகளை மூடிவிடா வண்ணமாவது இவர்கள் ஆட்சி காலத்தில் இருக்க வேண்டுமென்பதே நமது அவா.

சமீபத்தில் எய்டெட் பாடசாலையிலுள்ள ஹையர்கிரேட் ஆசிரியர்களுக்கு மட்டும் தற்போது கொடுக்கப்படும் மாதாந்தர கிராண்டு ரூ. 25–லிருந்து இரண்டு ரூபாய் அதிகப்படுத்தி 27 ஆக 1950 ஏப்ரல் முதற்கொண்டு கொடுக்க உத்தேசித்திருப்பதாக ஓர் அறிக்கை பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றது. அது அரசாங்க அறிக்கையாகக் காணப்படவில்லை. அப்படி அரசாங்க அறிக்கையாக இருந்தாலுங்கூட ஆசிரியர்கள் பாராட்டுக்குரிய முக்கியத்துவம் அறிக்கையில் ஒன்றும் இல்லை. அழுகிற குழந்தைக்கு வாழைப்பழம் கொடுப்பதுபோல், வறுமையால் பொங்கியெழும் ஆசிரியர் உள்ளத்திற்குச் சற்று சாந்தி செய்யும் முறையைக் கையாளுவது கல்வி மந்திரியார் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளாது' கொடுக்கும் ரூ. 27-ல் 3 ரூபாய் பாடசாலை நிர்வாகிகளைக் கொடுக்கும்படி வற்புறுத்தியிருக்கின்றார். தற்போதுள்ள நிலையில்லா நிர்வாககிராண்டைநம்பி எத்தனைப் பணமில்லாப் பாடசாலை நிர்வாகிகள் 3 ரூபாய் கைவிட்டு கொடுக்கப் போகின்றார்களென்பது நமக்கு விளங்கவில்லை.

# ஆட்சியாளர்கள் செய்ய வேண்டியதென்ன ?

தற்போது நமது மாகாணத்தில் 150000 ஆரம்ப ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இப்பொழுது ஆதாரச்சம்பளம் ஜில்லா போர்ட், முனிசிபல் ஆசிரியர்களுக்கு ரூ. 30–ம், எய்டட் பாடசாலை ஆசிரியர்களுக்கு ரூ. 25-ம் கொடுக்கப்படுகின்றன. இந்த ஆதாரச் சம்பளங்களை வித்தியாசமில்லாமல் எல்லா ஆசிரியர்களுக்கும் மாதம் குறைந்தது ரூபாய் 40 தாவது உயர்த்தப்படவேண்டும். அப்படி உயர்த்தினால் அரசாங்கத்திற்கு அதிகப்படியாக வேண்டிய பணம் ரூபாய் இரண்டு கோடிதான்.

சுமார் 64 கோடி ரூபாய் செலவாகும் இந்த மாகாண ஆட்சியில், 2 கோடி ரூபாய் ஆரம்ப ஆசிரியர்களுக்கென ஒதுக்க முடியவில்லையென்றால் ஆட்சியாளர்களுக்கு மனமில்லை என்று தான் சொல்லவேண்டுமே யொழிய பணமில்லையென்று சொல்லிவிட முடியாது. எத்தனையோ இனங்களில் நம் ஆட்சியாளர்கள் பணத்தைப் பாழாக்குகின்றார்கள். நாமும் எடுத்துக் காட்டி இருக்கின்றோம் நமது பத்திரிகையில். எதிர்க்கட்சிகாரர்களும் எடுத்துக்காட்டுகின்றார்கள். சுலபமாக இந்த 2 கோடி ரூபாயை ஆரம்பக்கல்விக்கென ஒதுக்கலாம் மனமிருந்தால்.

உயர்தர பாடசாலைகளை செகண்டரி பாடசாலைகளாக மாற்றும் திட்டத்தை நிறுத்தலாம். ஆதாரக் கல்வி பாடசாலைகளை இன்னும் அதிகப்படுத்தாமல் இருக்கிற பாடசாலைகளை வைத்து பரீக்ஷித்துப் பார்க்கலாம். அனாவசியமாக ஏற்படுத்தப்பட்டுள்ள நான்கு டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களையும், அவர்களுக்காக வைத்துள்ள நிர்வாக ஆபீஸ் குமாஸ்தாக்களையும் குறைத்து விடலாம், எடுத்துவிடலாம். இனிமேல் அனாவசியமாக டிப்புடி இன்ஸ்பெக்டர்களையும் அவர்கள் நிர்வாகங்களையும் அதிகப்படுத்தாமல் பழைய முறையில் குறைத்துவிடலாம். அப்படி செய்வதனால் தற்போதுள்ள ஆரம்பக் கல்வியின் நிலை எந்த வகையிலும் குறைந்து விடாது. கல்வி இலாக்காவில் மட்டுமல்லாமல் மற்ற இலாக்காக்களிலும் பல வகையிலும் அனாவசியமாகப் பணம் பாழாக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் ஆட்சியாளர்கள் நிதான புத்தியுடன், நடுநிலையில் நின்று பொது மக்கள் பணத்தைப் பாழாக்கக் கூடாதென்ற சிக்கன எண்ணத்துடன் சிந்தித்துப் பார்ப்பார்களானால் 2 கோடி மட்டுமல்ல இன்னும் ரூ: 5 கோடி ஆரம்பாசிரியர்களின் நிலையை உயர்த்தக் கட்டாயமாக பணம் அகப்படும். ஆரம்பசிரியர்களின் சம்பள பிரச்சனை என்றாலே ஆட்சியாளருக்கு அறுவறுப்பு மட்டுமல்ல, ஆரம்பாசிரியர்கள் என்றால் இவர்கள் 'ட' ஞ உபாத்தியாயர்கள்தானே இவர்கள் வாயில்லா பூச்சிகள், இவர்களுக்கு ஆட்சியைப்பற்றி பேசஎன்ன உரிமையும் கடமையும் இருக்கின்றது, இவர்களுக்குத் தான் வாயைத்திறக்காதபடி தாலூக்கா சங்கங்களை ஒன்று கூட்டி ஜில்லா சங்கமாக்கவும், ஜில்லா சங்கங்களை ஒன்றுகூட்டி மாகாண சங்கமாக்கவும், ஒரு பெருங்கூட்டமாக நாட்டில் சேர்ந்து கிளர்ச்சி செய்ய வழியில்லாமல், பல சட்ட திட்டங்களையும் அரசாங்க உத்தரவையும் போட்டிருக்கிறோமே, இவர்களால் கிளர்ச்சி செய்ய முடியாதென்ற அதிகார ஆணவ எண்ணங்கொண்டு, ஆரம்பாசிரியர்களை வெகு

அலட்சியமாக மனதில் எண்ணுகிறார்கள். ஆனால், இவைகளை வெளியில் சொல்லிக் கொள்ள மாட்டார்கள். அப்படி எண்ணை யில்லையானால் பாலாய் மாகாணத்தில், ஆசிரியர்களுக்கு எந்தக் கட்சியிலும் அங்கத்தினர்களாக சேரவும், பேசவும் உரிமை அளித்ததுபோல் இந்த சென்னை அரசாங்கத்தார் ஏன் அந்த உரிமையை ஆசிரியர்களுக்கு கொடுக்கக்கூடாது. கூட்டங் களில் மட்டும் "இன்றைய இளைஞர்களை நாளைய நாட்டின் வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும், தலைவர்களாக வும், மந்திரிகளாகவும் ஆக்கும் வல்லமைப் பெற்ற சிந்தனைச் சிற்பிகளே, ஆசிரியர்களே, உங்களுக்காக எவ்வளவோ செய்ய எண்ணிக்கொண்டிருக்கிறோம்; ஆனால் பணம் இல்லை, என் செய் வதென்று" அலங்காரமாக கூட்டத்தில் ஆசிரியர்களைப் பற்றி போற்றிப் புகழ்ந்து பேசிவிட்டுப் போய் விடுகிறார்கள். ஆரம்பா சிரியர்களின் பொருளாதார நிலையை உயர்த்த மனமும் கிடை யாது, எண்ணமும் கிடையாது. சிலர் எண்ணினாலும் செயலாற் றத் துணிவு கொள்ளுதலுங்கிடையாது-ஆட்சியாளர்கள்.

இன்று குமுறும் ஆசிரியர் உள்ளந்தான் நாளை எரிமலையாக மாறும். அப்படி மாறிவிட்டால் அந்த எரிமலையில் ஏற்படும் பெருந்தீயை அணைக்க யாராலும் முடியாது. ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை. கூட்டங்கள் கூட்டி கிளர்ச்சி செய்து தடியடிப்பட வேண்டியதில்லை. "எங்களுக்குக் கொடுக்கும் சம்பளம் வயிற்றுக்குப் போதாது, தன்மானத்து டன் நாங்கள் நாட்டில் வாழ முடியாது, இந்த ஆட்சியில் எங்களுக்கு எந்த உயர்வும் கிடைக்காது, நாங்கள் ஏன் அவஸ்த் தைப் பட வேண்டும்." என்று சில ஜில்லாவில் ஆசிரியர்கள் ஒரு மனதுடனும், சற்றுத்துணிவுடனும் இனி ஆசிரியர் வேலைத் தேவையில்லை என்று ராஜினமா செய்து விட்டு, மூன்று மாத நோட்டீஸையும் அந்தந்த நிர்வாகிகளுக்குக் கொடுத்து விடுவார் களேயானால், இந்த நாட்டின் கல்விநிலை எந்தக் கதியில் போய் நின்று விடுமென்பதை ஆட்சியாளர்கள் சற்று சிந்திக்க வேண் டும். காந்திஅடிகள் காட்டிய அஹிம்சா முறையைக்கடைப் பிடித்து, எவருக்கும் தொந்திரவு கொடுக்காமல் வேலையை விட்டே விலகி விடுவார்களானால், ஆசிரியர்களை ஆட்சியாளர்கள் என்ன செய்ய முடியும். நாட்டில் ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சி பலவகைகளிலும் சரிந்து கொண்டிருக்கிற பொழுது, இந்த லக்ஷத்து ஐம்பதினாயிரம் ஆசிரியர்களும், ஆட்சியாளர்க ளுக்கு எதிர்த்து பிரசாரம் செய்யத் தொடங்கிவிடுவார்களானால், பொதுமக்கள் அநுதாபமும், செல்வாக்கும், ஆசிரியர்கள்பால் அல்லவா அதிகமாக வளர்ந்து விடும். இப்பொழுது இவர்களை

வாயில்லா பூச்சிகளாக நினைக்கலாம் - ஆசிரியர்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்கு அடிமைப் பட்டிருக்கும் காரணத்தால். ஆனால், இப்பொழுது பலசட்ட திட்டங்களுக்குள் கட்டுப் பட்டு குமுறிக் கொண்டிருக்கும் ஆசியர் உள்ளம், ஆட்சியாளர்கள் போக்கு இப்படியே போய்க்கொண்டிருக்குமானால் ஒரு நாள் குமுறும் உள்ளம் எரிமலையாக மாறுவது இயற்கைதானே. அத்தகைய அறுவறுப்பான நிலை ஏற்படுவதற்கு முன்னமே ஆட்சியாளர்கள், ஆசிரியர்கள் பொருளாதார நிலையை உயர்த்த முக்கியமில்லாத அனாவசியமான சிலவினங்களை ஒதுக்கி, 2கோடி ரூபாய் ஆசிரியர்கள் சம்பள உயர்வுக்கென உடனடியாக (Supplemental Budget) ஆக கொண்டுவந்து ஏப்ரல் முதல் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ 40 க்குக் குறையாமல் மாதாமாதம் கொடுக்கும் படியான வழிவகைகளை செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். ஜில்லாக்களில் செல்வாக்குள்ள ஆசிரியர்கள், M. L. A. சட்டசபை அங்கத்தினர்களைக் கண்டு, விஷயங்களை எடுத்துக்காட்டி, இத்தகைய தீர்மானத்தை உடனடியாக சட்ட சபையில் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## மாதாந்திர கிராண்டு

மாதாந்திர கிராண்டை ஏற்படுத்தியதின் நோக்கம்- பிரதி மாதம் ஆசிரியர்களுக்குக் குறைந்தது 10 தேதிக்குள் சம்பளம் சேரவேண்டுமென்பதுதான். ஆனால், அம்மாதிரி பிரதிமாதம் சில ஜில்லாக்களில் ஒழுங்காக ஆசிரியர்களுக்கு பிரதிமாத சம்பளம் கிடைப்பதில்லை.

60–பாடசாலைகளுக்கு ஒரு டிப்டி இன்ஸ்பெக்டராக, முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகமாக டிப்புடி இன்ஸ்பெக்டர்களையும், அதற்குத் தக்கப்படி குமாஸ்தாக்களையும் அதிகப் படுத்தி இருக்கின்றனர் - புதிய சுதந்திர ஆட்சியில். எதற்காக இவ்விதம் கல்வி இலாகாவை அதிகமாக பெருக்கப்பட்டதென்பதற்குத் தக்க காரணமொன்றும் புலப்படவில்லை. ஆரம்பப் பாடசாலை அதிகப்பட்டதா என்றால், அப்படியொன்றும் பிரமாதமாக ஆரம்பக் கல்வி வளர்ந்து விடவில்லை. கல்வி வளராவிட்டாலும், அரை வயிற்றுக்குத் திண்டாடும் நமது ஆரம்பாசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் கொஞ்சமானாலும் அதுவும் மாதா மாதம் வந்து சேருவதுமில்லை.

இதற்குக்காரணம் டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸ் நிர்வாகம், அதிக சிக்கலான,குழப்பமான முறையில்நடைபெறுவதேயாகும்.

ஒரு ஜில்லாவில் ஒரு கல்வி அதிகாரி அனுஷ்டிக்கும் முறையை மற்ெருரு ஜில்லாவில் அனுஷ்டிப்பதில்லே. உதாரணமாக ஆசிரியர்கள் அகப்படாத இக்காலத்தில் 6, 7, 8 வகுப்புகளுக்கு ஹையர்கிரேட் ஆசிரியர்களேப் போதிக்க அனுமதி கேட்கும் மனுக்கள், தேர்ச்சிப்பெருத S. S. L. C. மாணவர்களே ஆசிரியராக அமர்த்திக்கொள்ள அனுப்பும் மனுக்கள் போன்ற பல விஷயங்களில் சம்பந்தப்பட்ட கடிதங்களேயும், மனுக்களேயும் டிப்புடி இன்ஸ்பெக்டர் ஆபீஸுக்கு தலேமை ஆசிரியர்கள் அனுப்பினுல் குறைந்தது 2, 3 மாதங்களாகும், அனுமதியோ தக்க உத்தரவோ கிடைப்பதற்கு.

அப்படி அனுமதி ஒருவருடம் கொடுத்தால் அத்தகைய அனுமதியை மறு வருடமும் புதுப்பிக்க வேண்டுமென்று ஒரு ரேஞ்சு கல்வி அதிகாரி உத்தரவு போடுவார். மற்றொரு ரேஞ்சில் ஒருவருடத்தில் (exemption) கிடைத்தால் அதுவே போதும் என்பார் மற்றொரு காருண்யமுள்ள டிப்புடி இன்ஸ் பெக்டர் மற்றொரு ரேஞ்சில். இப்படி ஜில்லாவிற்கு ஜில்லா, ரேஞ்சுக்கு ரேஞ்சு கிராண்டு சம்பந்தமான பல உத்தரவுகள் மாறிக்கொண்டேயிருக்கும். டிப்டி இன்ஸ்பெக்டர்களும் அடிக்கடி மாறிக்கொண்டே இருப்பார்கள். முன்பிருந்த டிப்டி இன்ஸ்பெக்டர் போட்ட உத்தரவை பின்பு வரும் டிப்டி இன்ஸ் பெக்டர் மாற்றிவிடுவார். இப்படி நாளுக்கு நாள் இன்ஸ்பெக்டர் ஆபீஸ் நிர்வாகங்கள் பல சிக்கலான குழப்பமான சூழ் நிலேயில் நடந்துகொண்டிருக்கின்றன. சில ரேஞ்சுகளில் அரசாங்கம், டைரக்டர் இவர்கள் அடிக்கடி புதுப்பிக்கும் சட்டதிட்டங்கள், உத்தரவுகள், சுற்றறிக்கைகள், பாடசாலே நிர்வாகிகளுக்கோ தலேமை ஆசிரியர்களுக்கோ அனுப்பப்பட மாட்டாது. ஆபீஸிலேயே எங்கேயாவது ஒரு மூலேயில் தூங்கிக்கொண்டிருக்கும். உதாரணமாக Weghtage முறை எடுத்துவிட்டதாக 1949 டிசம்பர் மாதம், வருடத்தின் கடைசீ கிராண்டு வாங்கும் பொழுதுதான், அதுவும் சில ஆசிரியர்களுக்கு கிராண்டுத் தொகை குறைந்துவந்தபொழுதுதான் தலேமையாசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் விஷயம் தெரிய வந்தது.

இது வரையில் Weightage முறை எப்பொழுது எடுக்கப்பட்டது? ஏன் எடுக்கப்பட்டது? என்ற விளக்கம் ஒருவருக்கும் தெரிவிக்கப்படவில்லே. அதே மாதிரிதான் நிர்வாக கிராண்டு முறையும் நிலேயில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு டிப்டி இன்ஸ்பெக்டரும் ஒவ்வொரு கருத்தை சொல்லுகிருர்கள். இதைப்பற்றிய நிரந்தரமான விளக்கம் கல்வி

அதிகாரிகளிடத்திலிருந்தோ, அரசாங்கத்தினிடத்திலிருந்தோ ஒரு ஒழுங்கான தெளிவான உத்தரவு பாடசாலை நிர்வாகிகளுக்கு இன்றுவரை கிடைத்த பாடில்லை. இவ்வளவு சிக்கலான நிலையில் டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸ் நிர்வாகம் நடக்குமானால் எப்படி மாதாந்திர கிராண்டு ஒழுங்காகக் கொடுக்க முடியும்? இந்தச் சிக்கலான நிலையைக் கல்வி அதிகாரிகள் கவனித்து, அனுப்பப் படும் கடிதங்களுக்கும் மனுக்களுக்கும் உடனுக்குடன் கவனித்து, தக்க உத்தரவுகள் போடப்படவேண்டும். டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸுக்கு வரும், அரசாங்கம் டைரக்டர் உத்தரவுகளை எல்லாம் கூடுமான வரையில் தமிழில் மொழி பெயர்த்து அந்தந்த தலைமையாசிரியர்களுக்கு உடனுக்குடன் அனுப்பவேண்டும். அப்படி ஒழுங்கான முறையில் நடந்தால்தான் மாதாந்திர கிராண்டு மட்டும் அல்ல, மற்ற கல்வி நிர்வாகமும் நல்ல முறை யில் நடக்கும்.

முனிசிபாலிடி, ஜில்லா போர்டுகளில் தலைமை ஆசிரியர் கள் பிரதிமாதம் ஆசிரியர்களுக்குரிய சம்பளங்களைப் போட்டு, சம்பளப்பட்டியை தயார்செய்து தலைமை ஆபீஸுக்கு அனுப்பி விடுகிறார்கள். தலைமை ஆபீஸில் குறிப்பிட்ட குமாஸ்தா அந்தப்பட்டியலை பரிசீலனை செய்து தவறுகள் இருந்தால் திருத்தி உடனே பணத்தை 7-ம் தேதிக்குள் அந்தந்தப் பாட சாலைகளுக்கு அனுப்பிவிடுகின்றனர். இந்த முறைப்படி மாதாந்திர கணக்கு அனுப்பும்பொழுதே எய்டெட் பாடசாலை தலைமை ஆசிரியர்களையே கிராண்டைக் குறித்து அனுப்பிவிடும் படி உத்தரவிட்டால் அவர்களே குறித்து அனுப்பிவிடுவார்கள். இவர்கள் அனுப்பியதை டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீஸ் குமாஸ்தா பரிசீலனை செய்து குற்றங் குறைகளிருந்தால் திருத்தி இரண்டு மூன்று நாட்களில் ஜில்லா கல்வி அதிகாரி களுக்கு அனுப்பி விடலாம். டிப்டி இன்ஸ்பெக்டர்கள் மாதாந் திர கணக்கில் காணும் குறைகளைத் தலைமை ஆசிரியர்களுக்கு குறித்து அனுப்பிவிட்டால் அடுத்துவரும் மாதாந்திர கணக்கில் பழைய குறைகள் நீங்கிவிடும். இந்த முறையினால் சுலபமாக பிரதிமாதம் 7-ம் தேதிக்குள் ஆசிரியர்களுக்கு சம்பளம் கிடைத்துவிடும். இந்த முறையை அனுஷ்டிக்கும்படி கல்வி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இதை ஆட்சியாளர்களும் கல்வி அதிகாரிகளும் கவனிப்பார் களாக.

---

# கொஞ்சந்தான்!

[R. சண்முகம், ஆசிரியர்—மறத்துறை]

இந்தக் 'கொஞ்சந்தான்' என்ற சொல், சிறப்பாக நம் இந்திய நாட்டிற்கும் குறிப்பாக சென்னை மாகாணத்திற்கும் மிகுந்த உறவு. எதிலெடுத்தாலும் கொஞ்சந்தான். உணவுப் பொருளா, கொஞ்சந்தான்; நாட்டில் வைத்திய வசதிகளா, கொஞ்சந்தான்; நல்லெண்ணம் கொண்டவர்களா, கொஞ்சந்தான்; நற்பணி புரிபவர்களா, கொஞ்சந்தான். நலமும் கொஞ்சந்தான்; பலமும் கொஞ்சந்தான்; படித்தவர்களா, மிகமிகக் கொஞ்சந்தான். இப்படியாகக் 'கொஞ்சந்தான்' என்ற சொல் மிகவும் அதிகம். இது விஷயத்தில் மட்டும் கொஞ்சம் என்ற சொல் நிற்கவில்லை. இப்படியே கொஞ்சமல்ல என்ற வார்த்தையை எடுத்துக் கொண்டாலும் மேற்சொன்னவைக்கு எதிர்மாறாக எல்லாம் கொஞ்சமல்ல. பட்டினி பட்டாளம், அரை நிர்வாணங்கள், படியாதவர்கள், படிப்பூட்டும் ஆசிரியர்களின் அவல நிலை—அனாதை நிலை, இவை கொஞ்சமல்ல. இன்னும் கொஞ்சமல்ல என்று எடுத்துக்கொண்டால், அனாவசியமான செலவு, ஆடம்பரத்திற்கு இறைக்கும் பணம், ஆபத்தைத் தேடச் செய்யும் முயற்சி இவை கொஞ்சமல்ல. மேற்கண்ட கொஞ்சந்தான் என்பவற்றை அதிகமாக்கவும், கொஞ்சமல்ல என்பவற்றைக் குறைக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவா என்றால் உண்டு என்று முழு மனதோடு ஒப்புக்கொள்ள முடியவில்லை.

இன்றைய சமுதாயம் விழிப்படைந்து, தன்னம்பிக்கைப் பெருகி, நாட்டு மக்களிடையே நல்லுறவு பூண்டு ஒருவருக்கொருவர் உயர்பண்பின் அடிப்படையிலே வாழ வேண்டுமானால், இன்றைக்கு தேவைப்பட்டதென்ன? கல்வி என்று சொல்லவும் வேண்டுமா? கல்வியின்மை கொஞ்சமல்ல என்ற தன்மையிலும், கல்வியும், கல்வி பரவுவதற்குரிய சாதனமும், கல்வி யூட்டும் ஆசான்களுக்கு ஏற்பட்டிருக்கும் இழிநிலையைப் போக்க நினைக்கும் வகையும் கொஞ்சந்தான் என்ற தன்மையிலும் இதே சமுதாயம் சென்று கொண்டிருக்குமானால் இதன் முடிவு என்னவாயிருக்கும்? வருங்கால நிலை என்ன? இதைச் சிந்தித்து உணர்ந்தவர்கள் எத்தனை பேர்?

நாட்டிலே படித்தவர்கள் கொஞ்சம். இதைத் திருத்தியமைக்கவேண்டியது, இன்றியமையாத தொன்றும், இப்பொழுதே செய்யவேண்டிய தொன்றுமாகும். இதற்கு எந்தவிதமான ஆயுத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன?

சென்ற அடிமை நாட்டிலே கல்வி புகட்டும் நிலை வேறு. கல்வி, நாட்டு மக்களிடையே பரவாமலிருந்தால், இன்னும் தமது ஆட்சிபீடம் ஆசையாமல் நிற்கும் என்று கருதியிருந்த காலம் அது. கல்வியை நாட்டு மக்களிடையே எங்கே பரவ வைத்துவிடுவார்களோ, அடிமைக் குடிசைகளிலே எங்கே அறிவுத் தீயை மூட்டிவிடுவார்களோ என்று அஞ்சியிருந்த காலம் அது. இதன் காரணத்தால் ஆசிரியர்களாக யாரும் ஆகிவிடாமல் பார்த்துக் கொண்டிருந்த காலம் அது. இன்றைய காலம் அப்படியல்ல. பசித்தவனுக்கு உணவு போல, படியாதவனுக்குக் கல்வி தேவை. பசித்தவன் இறந்துவிடாமல் இருக்க எவ்வளவு மதிப்பானாலும் உணவை வாங்கி ஊட்ட வேண்டியதைப் போல, படியாதவனுக்கு, கல்வி எவ்வளவு விலையானாலும் ஊட்டவேண்டிய நிலை இந்தக் காலத்தில். இக் கருத்துக்குக் கொண்டுவர வேண்டியவர் யார்?

ஒட்டிய உலர்ந்த முகத்தின் நெற்றியில் வறுமைக் கோடுகள்—குழிவிழுந்து பஞ்சத்தைக் கக்கும் கண்கள்—உடலை அரையும் குறையுமாக மூடிச் சிரிக்கும் கந்தல்—இந்தக் கோலத்தோடு ஆசிரியர், தன்னலமின்ற பணியை நடத்தின அந்தக் காலத்தில், ஆமைவேகத்தில் கல்வி பரவியதையே கண்டிக்க வேண்டிய நிலையிலிருந்தது. ஆனால் இன்று அப்படி முடியுமா? எவ்வளவு வேகத்தில் கல்வி பரவவேண்டுமோ அவ்வளவு வேகம் தேவை.

வண்டியிலே உணவு உள்ளது. இதை உண்ணாத மக்களுக்கு அனுப்ப வேண்டும். எவ்வளவு வேகம் தேவை? அவ்வளவு வேகம் வேண்டும். காலிலே விஷம் தீண்டிவிட்டது. எவ்வளவு வேகமாக சிகிச்சை செய்யவேண்டுமோ அவ்வளவு வேகம் தேவை. அறியாமைப் பாம்பு நல்லுடலாகிய நம்நாட்டின் அறிவுக் குருதியிலே நஞ்சைக் கலந்துவிட்டது. நாட்டுக் கல்வி இறந்து போகும் நிலையிலே இருக்கிறது. இதற்கு வேகமான சிகிச்சை வேண்டும்? விளக்கிலே எண்ணெயில்லை. திரி கருகிவருகிறது. எவ்வளவு அவசரமாக எண்ணெய்ப் பெய்யவேண்டும்? இந்தமாதிரியான நெருக்கடியான நிலைமையில், நம்நாட்டுக் கல்வி யோட்டம் எப்படியிருக்கிறதென்றால் ஒரே கருத்தில் விளக்கிவிடலாம், கல்வி நோயை அகற்ற ஆசிரியப் பணிக்கு ஒருவரும் முன்வர மறுக்கிறார்கள். இது போதாதா? எவ்வளவு தூரம் இந்தத் துறை சீர்கேடடைந்திருந்தால் இந்த நிலை வரும்? ஏன் இந்த நிலை?

சமுதாயத்திலே ஆசிரியனுக்குள்ள இழிவுதான் காரணம்.

விடம் தீண்டியதை விலக்கப் போகுபவன் முகத்திலே கரி பூசுகிறது சமுதாயம். யார் சமுதாயம்? சமுதாயம் யார்? இரண்டும் அரசாங்கமல்லவா?

போதுமப்பா போதும்! வாத்தியார் வேலை! என்று இழிந்து கூறுகிறார்கள், கல்வி துறைக்கு வரவேண்டிய இளைஞர்கள். ஏன் இந்த நிலை? இந்த இழிவைப் போக்குவது யார்? எப்படி? இவற்றிற்கு காரணம் ஆராயும்போதுதான் அறிஞர்கள் பலர் கூறுகின்றனர், அமைச்சரில் ஆசி பெற வேண்டி, 'வேறு ஒன்றும் இழிவுக்குக் காரணமில்லை, எல்லாம் ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே இழிவாக எண்ணி வருகின்றார்கள்' என்று. இது முழுக்காரணமாக இருக்க முடியுமா? ஆசிரியனின் கண்ணிலே ஆசிரியனுடைய விரலையே கொண்டு குத்தும் செய்தியல்லவா? ஆசிரியர்களை வாழ வகையற்றவர்கள் என்று கருதிக் கூறும் வேதனை வார்த்தைகளல்லவா அவைகள்? இன்றும் அவர்களே கூறுகிறார்கள், 'ஆசிரியர்கள், தங்கள் கடமைகளைச் சரிவர செய்ய வேண்டும்; பெற்றோர்களை அடுத்து அளவளாவி இழிநிலையைப் போக்கிக் கொள்ள வேண்டும்' என்று. இது கற்ற வித்தையைப் பெற்ற தாயிடம் காட்டும் செயலல்லவா? 'கடமையைச் செய்' என்று, கடமை உணர்ச்சியை இளங்காளைகளின் இரத்தத்திலே கலக்கின்ற ஆசிரியர்களிடம் கூறுவது வருந்தத் தக்கது. இன்னும் பெற்றோர்களிடம் இதைப்பற்றி அளவளாவது அதைவிட வருந்தத் தக்கது. பெற்றோர்களிடம் ஓர் ஆசிரியர் பேசுவதைப் பெற்றோர்கள் வெறுக்கிறார்களென்றால், அதற்குக் காரணம், அவர்களுக்குள்ள ஒருபயம். இது ஆசிரியர் பிரம்படி கொடுத்து விடுவாரோ என்றல்ல, படி கேட்டு விட்டால் என்ன செய்வது என்று. இவர்கள் நிலை யாசகம் கேட்கும் தன்மையிலுள்ளதை நினைக்கும் பொழுது, சுயமரியாதையை ஆசிரியன் விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதை நினைக்கும் பொழுது, மேற்சொன்ன, ஆசிரியர்தான் காரணமென்பது, மிகக்கொஞ்சந்தான். இன்னோரன்ன பல காரணங்களை வைத்துக் கொண்டு, எதிர்காலத்தைப் பார்க்கும் வாலிபர்கள் 'ஐயோ' என அலறி ஆசிரியர் பணியை வெறுக்கிறார்களென்றால்; அதில் வியப்பொன்றுமில்லை. இதை உணர்வது யார்? உயர்த்துவது யார்?

# அன்றும் இன்றும் ஒன்றே!

(கே. நாராயணசாமி பிள்ளை, தருமதுப்பட்டி)

## சென்னுமவலம் செலவழிந்தும் பட்டினி

எய்டெட் பாடசாலைகளுக்கு தற்போது இராண்டுத்தொகை ஒவ்வொரு மாதமும் பட்டுவாடாச் செய்வதாகத் திட்டம் ஏற்பட்டு நடந்து வருவதை நான் மனக்களிப்புடன் பாராட்டுகிறேன். மாதா மாதம் பட்டுவாடாச் செய்வதாக ஏட்டளவில் இருக்கிறதேயொழிய செய்கையளவில் மூன்று மாதங்களுக்கு ஒரு சம்பளந்தான் பட்டுவாடா ஆகிக்கொண்டு வருகிறது. இச்செய்கை மதுரை ஜில்லாவில் நடைபெற்று வருகிறது. இதர ஜில்லாக்களில் எவ்வாறு நடை பெருகிறதோ நாம் அறியோம். இவ்வாறு சம்பளம் பட்டுவாடாச் செய்வதால் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காகப் பாடு படும் எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கு எவ்வளவு உற்சாகம், ஊக்கம் ஏற்படும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

ஏனென்ருல் ஒவ்வொரு தொழிலின் மூலம கிடைக்கும் ஊதியம், தொழில் செய்பவரின் வாழ்க்கையை நடத்துவதற்காகும் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

உதாரணமாக:— நித்தியம் கூலி வேலைசெய்து வாழ்க்கையை நடத்தும் ஒரு கூலிக்காரன், காலை முதல் மாலை வரை தனக்கு ஏதாவது கூலி வேலை கிடைக்குமா என்று அலை மோதிக் கடைசியில் ஏதாவது கூலிவேலை கிடைத்து, அதை மனக்களிப்புடன் செய்து முடித்து, மாலையில் தன்னுடைய கூலியைக் கேட்கும் போது, "இதைச் செய் கூலியை வாங்கிக்கொள்" என்று சொன்னவர், தற்சமயம் இல்லை நாளைத்தருகிறேன் என்று சொன்ஞல், கூலிக்காரன் என்ன பாடு படுவான் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

அம்மாதிரியேதான் தற்போது எய்டெட் பாடசாலையில் வேலைசெய்யும் ஆசிரியர்களின் கதியும். எப்படியென்ருல் ஒவ்வொரு மாதமும் முடிவில் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய சம்பளம் கிடைக்கும் என்று நினைத்துத் தங்களுடைய குடும்பங்களுக்கு வேண்டிய சகல பொருள்களையும் கடனுகவே, வாங்கிக்கொள்ளுகிருர்கள். மாதம் கடைசி ஆனவுடன் அடுத்த மாதம் பிறந்ததும் கடன்

கொடுத்தவர்கள் தங்களுடைய பணத்தைக் கேட்கிறார்கள். ஆசிரியர்கள் இன்னும் சம்பளம் வரவில்லை; வரவில்லை என்று சொல்லிக் கொண்டே அடுத்த மாதம் தங்களுடைய குடும்பங்களுக்கு வேண்டிய சகல பொருள்களையும் மறுபடியும் கடனாகவே, வாங்கி வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். இதற்குள் மாதம் இரண்டு கழிந்து போகிறது. மூன்றாம் மாதம் பிறந்து 20 உக்கு மேல் ஒரு மாதத்திய சம்பளம் வருகிறது. அப்போது ஆசிரியர்கள், கடன் கொடுத்தவர்களிடம் படும் அவஸ்தையும், அவமானமும் இன்னதென்று சொல்ல இயலாது. வருமானம் ஒரு மாதத்திற்கும் செலவு இரண்டு மாதங்களுக்கும் ஏற்பட்டு விடுகிறது. இதனால் ஆசிரியர்களின் அந்தஸ்தும் குறைந்து, பொது ஜனங்களால் ஏளனம் செய்ய வேண்டியவர்களுமாகி விடுகிறார்கள்.

நான் ஏன் இவ்விஷயத்தை இவ்வளவு பிரமாதமாக எழுதினேனென்றால்; எந்த உத்தியோகமோ, அல்லது எத்தத் தொழிலிலோ, எதுவாக இருந்தாலும் அதற்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் அம்மாதம் முடிந்து அடுத்த மாதம் பிறந்த ஐந்து நாட்களுக்குள் கிடைத்து விடுகிறது. எந்த உத்தியோகஸ்தர் தன்னுடைய சம்பளத்தை ஒரு மாதம் கடந்து அடுத்த மாதம் ஐந்து நாட்களுக்குள் வாங்காமல் இருக்கிறார். எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கு மட்டும் ஏன் தாமதம்? என்பது தெரியவில்லை. இப்படியிருக்க எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கு மட்டும் சம்பளத் தாமதம் ஏற்படுகிறதை முன்னிட்டு அவ்வாசிரியர்களுக்கு வயிறு பசிப்பதும் தாமதமாகுமா? அவர்களுடைய மனைவி மக்களுக்கும் வயிறு பசிப்பது தாமதமாகுமா? பாலைவனக்கப்பல் என்ற ஒட்டகம் போல் நீண்ட நாட்களுக்கு வேண்டிய ஆகாரத்தை சேமித்து வைக்கும் சக்தியை எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கு கடவுள் தனியாய் ஏற்படுத்தியிருக்கிறாரா; அப்படியே ஏற்படுத்தியிருந்தாலும் சம்பளத்தாமதத்தைப் பற்றிய கவலை என்பதே இல்லை. சம்பளமும் இரண்டு மாதங்களுக்கு ஒரு சம்பளமே, போதுமானதாகும். இத்தகைய ஏற்பாடு கடவுளால் ஏற்படுத்தப் பட்டிருந்தால் கவர்ன்மெண்டாருக்கு ஒரு ஆசிரியருக்கு 6 மாதத்திய சம்பளம் மீதமாகும். இப்படியே எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கு எல்லோருக்கும் மீதமாகும் போது கவர்ன்மெண்டாருக்கு ஏராளமான பணம் மிகுந்து போகும்.

பாலைவனக் கப்பலென்ற ஒட்டகம் போன்ற இயற்கைச் சாதனம் ஒன்றும் எய்டெட்

ஸ்கூல் ஆசிரியர்களுக்கு இல்லை, ஆகையால் கல்வியின் ஆட்சியாளர்கள் தயவு செய்து, ஆரம்பக் கல்விக்காக அரும்பாடு படும் எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களின் சம்பளத் தாமதத்தை கவனித்து ஒவ்வொரு மாதமும் முடிந்து, 10 நாட்களுக்குள்ளாவது சம்பளம் கிடைக்கும்படியான திட்டம் செய்யவேண்டுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சம்பளம் குறைவு, அல்லது கூடுதல் என்ற பிரசசினையைக் கருதி நான் இவ்விஷயத்தை எழுதவில்லை. கெட்டையோ, குட்டையோ எதுவாகுலும் குறிப்பிட்ட நாட்களுக்குள் கிடைக்கவேண்டு மென்பதே யாகும். அதாவது: பருவத்தே பயிர்செய் என்பதும், யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும உறங்கு வருமாக முடியும், என்பதற்கிணங்க.

---


# "ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

## 94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

| | | | |
|---|---|---|---|
| மாதாந்திர கணக்கு அனுப்பும் பாரங்கள் | (ஆங்கிலம்) | 100 | ரூ. 2-8 |
| ரிகார்ட் ஷீட்டுகள் | (ஆங்கிலம்) | 100 | ரூ. 2-0 |
| பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் | (ஆங்கிலம்) | 100 | ரூ. 2-0 |
| பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் | (ஆங்கிலம்) | 100 | ரூ. 1 0 |

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல்

முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# "ஆரம்பக் கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "புது முறை சங்க வாசகங்களை" பாட புத்தகங்களாக வைத்து ஆதரிக்கும் எய்டெட ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "ஆரம்பக்கல்வி" மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப் படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ் குறித்துள்ள அளவுக்கு தபால் ஸ்டாம்புகளை (Postage Stamps) வாங்கி கவரில் வைத்து அனுப்பவும். புத்தகங்களை இனாமாக (Book Post)ல் அனுப்பப்படும்.

## ஸ்டாம்புகள் அனுப்ப வேண்டிய தொகை

### புதுமுறை சங்க வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 3 | 25–4–'44 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 5 | 14-5-'46 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 7 | 0 | 5 | 20-5-'47 |
| நான்காம் வகுப்பு | 0 | 8 | 0 | 8 | 1-6-'48 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 8 | 1-6-'48 |

இந்த ஐந்து புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0-3-3 தபால் பில்லைகள் அனுப்பவும்.

### கதைப் புத்தகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாலர் நல்ல கதைகள் நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | 7 | 20-5-'47 |
| பாலர் கதா போதினி ஐந்தாம் வகுப்பு | 0 | 5 | 0 | 7 | 20-5-'47 |

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–1–9 தபால் பில்லைகள் வாங்கி அனுப்பவும்.

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | | |
| நான்காம் | 0 | 7 | 0 | 4 | 14-5-'46 |
| ஐந்தாம் | 0 | 8 | 0 | 4 | 14-5'46 |

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் 0–1–9 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

## புதிய தேச ஆட்சி முறை

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 | 5 | 0 | | |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 4 | 1-5-'45 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 4 | 20-5-'47 |

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 0–1–9 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

Mother India English Reader First Primer 0 4 0

மேற்குறித்த 1 முதல் 5-வது வகுப்பு வரையில் எம்மிடத்திலுள்ள எல்லாப் பாடப் புத்தகங்களையும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள் 0–8-0 தபால் பில்லைகள் அனுப்பி வைக்கவும்.

## உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(Higher Elementary Schools)

## அனுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 2 | 27-12-'49 |
| ஏழாம் வகுப்பு | 0 | 12 | 0 | 2 | 27-12-'49 |
| எட்டாம் வகுப்பு | 0 | 12 | 0 | 2 | 27-12-'49 |

தென்னிந்திய பெருமக்கள் 6, 7, 8 வகுப்புக்களுக்கு 0 10 0

இந்த நான்கு புத்தகங்களை மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள் 0–2–9 தபால் பில்லைகள் அனுப்பவும்.

## ஆட்சி முறையும் உடல்நல முறையும்

Civics and Hygiene

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 9 | 0 |
| ஏழாம் வகுப்பு | 0 | 12 | 0 |

**0–1–9 தபால் பில்லைகள் அனுப்பவும்**

## புத்தகம் வைத்துள்ள தோழர்களுக்கு

சென்ற வருடம் நமது பாட புத்தகங்களை வைத்து ஆதரித்து இனமாக நமது "ஆரம்பக் கல்வியை" பெற்றுக் கொண்டு வரும் பாடசாலை தலைமை ஆசிரியர்களும், நிர்வாகிகளும், மே 31-ம் தேதிக்குள், தாங்கள் இவ்வருடமும் 1950—1951 தொடர்ந்து வாசகங்களை வைத்துக் கொள்வதாக ஒரு கார்டு நமது காரியாலயத்திற்கு முன்னதாகவே எழுதிவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அதன்பிறகுதான் ஆரம்பக் கல்வி தொடர்ச்சியாக வரும்.

காஞ்சி வள்ளல்

# சி. கந்தசாமி முதலியாரவர்கள்

## வாழ்க்கை வரலாறு

கச்சியம்பதியில் **தேனம்பாக்கம் வேங்கடாசல முதலியார்** அவர்களும், அவர்தம் வாழ்க்கைத் துணைவியாராகிய **புதுவைத் தாயம்மையார்** அவர்களும் செய்த பெருந்தவப்பயனாய் வள்ளலார் உயர்திருவாளர் **C. கந்தசாமி முதலியாரவர்கள்** 1879-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்களில் பிறந்தனர். புதல்வரைப் பெற்று மகிழ்ந்த பெற்றோருக்கு 1882-ஆம் ஆண்டு ஒரு பெண் மகவும் பிறந்தது. முதலியாரவர்கள் தம் இளமைப் பருவத்தைத் தம் அம்மானாரான புதுவை **வி. சபாபதி முதலியாரவர்கள்** இல்லத்தில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரையிற் கல்வி கற்பதிற்கழித்தார்; பின்னர்க் கச்சியம்பதியை அடைந்து, தம் பெற்றோருடனிருந்து, பச்சையப்பர் உயர்நிலைப் பள்ளியிற்சேர்ந்து கல்வி பயின்றார்; பத்தொன்பதாம் வயதில் அரசாங்கப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றுக் காஞ்சி நகராண்மைக் கழகத்தில் இரு திங்கள் பணியாற்றினார்; தம் அம்மானார் புதல்வியரான திருமதி இரத்தின அம்மாளை வாழ்க்கைத் துணைவியாராக மணந்தார்.

திருவாளர் குருசாமிப் பிள்ளையவர்கள் உதவியால் 1-11-1900ல் சென்னையில் போர்ப்படைக்குரிய உடை தயாரிக்கும் தொழிற்சாலையில் (Army Clothing Factory) பதினைந்து ரூபாய் மாதச் சம்பளத்திற்கு வேலையில் அமர்ந்த முதலியாரவர்கள், அனைவர் மதிப்பிற்கும் உரியவராய்த் தொண்டாற்றி, 1905-ஆம் ஆண்டு கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டார். மாற்றத்தை விரும்பாத முதலியார், இரு திங்கள்வரை அலுவலை விட்டு நீங்கியிருந்தார்; ஆயினும், தொழிற்சாலை அதிகாரிகள் விருப்பத்தால் மீண்டும் பணி பெற்றுச் சென்னையிலேயே தொண்டாற்றி வந்தார்.

1915-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12-ஆம் நாள் முதலியாரவர்கள் வாழ்க்கைத் துணைவியார் நோய்வாய்ப்பட்டிருந்தது காரணமாக மண்ணுலக வாழ்வை நீத்தனர். மனைவியாரின் பிரிவால் துன்புற்றிருந்த முதலியாரவர்கள், அடுத்த ஆண்டிலேயே திருமதி நாகராஜம்மாளை மணந்து, இல்லறத்தை இனிது நடத்தி வந்தார். 15 ரூபாய் மாதச்

சம்பளத்திற்குத் தொழிற் சாலையில் தமது தொண்டைத் தொடங்கிய முதலியாரவர்கள், 1919-ஆம் ஆண்டில் ரூபாய் 120 ஊதியம் பெறும் வாய்ப்பைப் பெற்றார்; எனினும், மீண்டும் கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டதால், முதுமைப்பருவத்தினரான தம் அன்னையாரை விட்டுப்பிரிய மனமில்லாதவராய், உபகாரச் சம்பளம் பெற்று வேலையிலிருந்து நீங்கிக் கச்சியம் பதியை அடைந்தார். முதலியார் தம் தங்கையார் புதல்வரான சதாசிவம் என்பவரைத் தம் இல்லத்திலேயே இருந்து கல்வி கற்று வரச்செய்தார். முதலியாருக்கு 1923-ல் **பாலசுப்பிரமணியன்** என்னும் புதல்வரும், 1926-ல் **கிருபா சுந்தரி** என்னும் புதல்வியரும் தோன்றினர். புதல்வர் பச்சையப்பர் உயர்நிலைப் பள்ளியிலும், புதல்வியர் இந்து பெண் பாடசாலையிலும் சேர்ந்து கல்வி பயின்றனர்.

முதலியார் தம் செல்வப் புதல்வியர் **கிருபா சுந்தரி** அம்மையாரைக் கோவை திரு. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. Sc., அவர்களுக்கு வாழ்க்கைத் துணைவியராக்கி மகிழ்ந்தார். அந்தோ! அம் மகிழ்ச்சி அடுத்த ஆண்டிலேயே நேர்ந்த அப்புதல்வியார் மரணத்தால் மறைந்தது. 'பட்ட காலிலேயே படும்; கெட்ட குடியே கெடும்,' என்னும் முதுமொழிக்கு ஏற்ப அடுத்த எட்டாந்திங்களில் அருமை மைந்தரும் மண்ணுலகவாழ்வை நீத்தது. மட்டிலாத் துயருக்குள் முதலியாரை ஆழ்த்தியது!

சிக்கன வாழ்க்கையாற் செவ்விய முறையில் பொருளீட்டிச் சிறந்த வாழக்கருதிய முதலியாருக்கு உலக வாழ்வின் தத்துவம் இனிது விளங்கியது.

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
'துய்ப்பேம்!' எனினே, தப்புந பலவே;'

"கடல் சூழ்ந்த நிலவுலகைப் பொது நீக்கி ஆண்ட அரசர்க்கும், இரவும் பகலுந் தூங்காது விலங்குகளைக் கொல்லக் கருதியுழலும் வேடனுக்கும் உண்பது நாழியரிசியும் உடுப்

பவை இரு நூண்டுகளுமே யாகும்; மற்றைய யாவும் ஒக்கும். ஆதலால் செல்வத்தாற் பெறும் பயன் கொடுத்தலே; ‘செல்வத்தை நாமே அனுபவிப்போம்'' என்று, எண்ணினால், தவறுவன பலவாகும்,'' என நக்கீரனார் என்னும் புலவர் பெருமான் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஆராய்ந்துரைத்த வாழ்க்கைத் தத்துவத்தைத் தம் உலகானுபவத்தால் உள்ளங்கை நெல்லிக்கனியென்த் தெள்ளிதின் உணர்ந்த முதலியார், உள்ளத் துறவுடைய உத்தமராய் மாறினார். தமக்கென வாழாத் தன்மையின் தனிப்பெரும்பண்பை இனிது உணர்ந்து, பிறர்க்கென வாழும் பெரியார் ஆயினார்; தாம் அரிதின் முயன்று தேடிய செல்வத்தை எடுத்துரையிற் பயன்படுத்தின் பிறர்க்கு என்றும் நின்று நிலவும் பயனைத் தரும் என்பதை ஆராய்ந்தார்;

மசகளுக்கு கல்வி போதிப்ப தேசிறந்த தருமம் என்று எண்ணினார். எனவே, கல்விக்கே தம் பொருள் பயன்பட வேண்டும் எனத்துணிந்தார்; இறந்த தம் மக்களின் நினைவுக்கு அறிகுறியாகத் தம் மைந்தர் கல்வி பயின்ற பச்சையப்பர் உயர் நிலைப்பள்ளியிற் பயிலும் திறமை மிக்க ஏழை மாணவரின் உபகாரச் சம்பள நிதிக்கு ரூபாய் இருபத்தையாயிரமும், புதல்வியர் பயின்ற இந்து பெண் பாடசாலைக்கு (ஸ்ரீசோமசுந்தர கன்னியா வித்தியாலயம், காஞ்சி) ரூபாய் இரண்டாயிரமும் நன்கொடை வழங்கினார். பின்னர், ‘உள்ளி உள்ளமெல்லாம் உவந்து ஈயும் அவ்வள்ளியோர்' என்னும் கம்பர் வாக்கிற்கு நல்லிலக்கியமாய், தம் இல்லம் முதல் அனைத்தும் விலைப்படுத்தித் தொகுத்த முதலையும் கையிருப்பையும் கூட்டி, எவரும் கேட்டு வியக்கத் தக்க முறையில், இப்பழம் பெருநகரில் கல்லூரியில்லாக் குறையை நீக்க ரூபாய் ஐம்பதினாயிரம் நன்கொடை வழங்கியதோடு அமையாமல், அல்லும் பகலும் ஊணுறக்கமின்றி, கனவிலும் கல்லூரி நினைவே உள்ளூறும் நினைவாய், செல்வர் இல்லந் தோறும் சென்று, கல்லூரி அமைப்பிற் பங்கு கொண்டு தம் கருத்தை நிறைவேற்றியருள வேண்டும் எனப் பெரிதும் மன்றாடி வந்தார். அந்தோ! அவர் கருத்து முற்றுப் பெறு முன்னரே அவரது மண்ணக வாழ்க்கை 1950–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9-ஆம் நாள் இரவு 12-15 மணிக்கு முற்றுப் பெற்றது! அவரது பருவுடல் மறையினும், நுண்ணுடல் ஊக்கங் குன்றாது அனைவர் உள்ளத்திலுமியங்கித் தான் கருதிய கருத்தை முற்றுவித்து மகிழும் என்பது ஒருதலை. வாழ்க வள்ளலார் ஆன்மா!

# "கல்வி நிலையங்களும், கண்காணிப்பு முறையும்"

## (ஒரு உண்மை விளம்பி)

இன்றைய கல்வியின் நிலையும், கண்காணிப்பு முறையையும் கூர்ந்து நோக்கின் மிகவும் கவலைக்குரியன. இந்நாட்டின் கல்வி நிலையங்கள் நன்முறையில் நடை பெருமைக்குப் பல காரணங்கள் உள. அதனால், கல்வி முன்னேற்றம் கிராமங்களில் மிகுந்த இழி நிலையிலுள்ளது. கல்வி நிலையங்களைச் சிறப்பாக மூன்று பெரும் பிரிவுக்குட்படுத்தலாம்.

1. அரசியலார் கல்வி நிலையங்கள்.

2. தலத்தாபனக் கல்வி நிலையங்கள்.

3. தனிப்பட்ட கல்வி நிலையங்கள்.

இவற்றுள் முன்னதும், பின்னதும் நன்கு நடைபெற்று வருகின்றன வென்றே கூறலாம்.

இரண்டாவதாகிய தலத்தாபனக் கல்வி நிலையங்களிலும், நகராண்மைக் கழக ஆட்சியிலும், ஐவர் அவை ஆட்சியிலும் உள்ளவை நன்கு நடத்தப் படுகின்றன. ஆனல், நாட்டாண்மைக் கழக ஆட்சியில் உள்ளவற்றின் நிர்வாகமே மிகச் சீர்கேடான நிலைமையில் உள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள.

(1) ஆசிரியர்களை அடிக்கடி மாற்றுதல (2) ஆசிரியர்களைப் போதிய அளவு நியமிக்காதிருத்தல் (3) ஒரு பள்ளிக்கூடத்தில் அளவுக்குமேல் ஆசிரியர்கள் இருக்க மற்றோரிடத்தில் ஆசிரியர் இன்றி அல்லற் படுதல் (4) ஒரு பள்ளிக்கூடத்திற்கு நடுநிலைப் பயிற்சிபெற்ற ஆசிரியர் தேவையாயிருக்கும்போது மற்ருெரு பள்ளிக்கூடத்தில் - அதுவும் ஐந்து வகுப்புகளுள்ள பள்ளியில்-பல நடு நிலைப் பயிற்சி (Secondary grade trained Teacher) பெற்ற ஆசிரியர் இருத்தல் (5) ஒரு ஊரில் உள்ள ஆசிரியரை மாற்றினல் அவர் கட்டளைக்குக் கீழ்ப்படியாது அங்கேயே இருக்கச் செய்தல் (6) குற்றம் செய்த ஆசிரியர் தண்டனை பெற மாட்டார். நன்ருக வேலை செய்யும் ஆசிரியர்க்குத் தண்டனை கிடைக்கும்-சிபாரிசு இன்மையால் (7) ஒருவர் குற்றம்செய்வார். அது குறித்துத் தலைமையாசிரியர் எவ்வளவு எழுதினுலும் கவ

ளிப்பதேயில்லை. ஏன்? அவர் குற்றமியற்றியவர், சிபாரிசு உடையவர். அதை மறைத்துக் குற்றம் என்று எழுதியவர்க்கே தண்டனை கிடைக்கும் -சிறு குற்றத்திற்குக்கூட. (8) நாட்டாண்மைக் கழக அலுவலகத்தில் உள்ள எழுத்தாளர்களின் தயவு கிடைத்துள்ள ஆசிரியர்கள் பள்ளிகளில் செய்யும் அட்டகாசங்கள் கவனிக்கப்படுவதேயில்லை. அவரைப் பற்றித் தலைமையாசிரியர் எழுதுவதையெல்லாம் எழுத்தாளர்கள் எடுத்துக்காட்டாது கரைத்துவிடுகிறதுமுண்டு. (9) வேண்டியவர்களுக்கும், சிபாரிசுடையவர்கட்கும் நல்ல ஊர்களில் மாற்றியளிப்பதும், ஏனையோரைத் தண்ணீர் இல்லாத காடுகளில் மாற்றுவதும். (10) ஒரு ஆண்டு முழுவதும் ஆசிரியர்களை மாற்றிக் கொண்டேயிருப்பது.

இத்தகைய காரணங்களால் ஆசிரியர்களுக்கு அல்லல் மட்டுமல்ல, மாணவர்களின் கல்வி முன்னேற்றமும் கனியும் சீர்கேடாகின்றது.

"சோம்பேறிகளும், தூங்குமூஞ்சிகளுந்தான் நாட்டாண்மைக் கழகப் பள்ளிகளில் ஆசிரியர்களாக உளர்," என்ற பொது எண்ணம் ஏற்படக் காரணம் நாட்டாண்மைக் கழகத்தாரேயன்றி ஆசிரியரன்று. ஏனெனில் இவர்கள்தான் தங்கள் மனம் போனவாறு மாற்றியும், தூற்றியும் ஆசிரியர் மனம் நோகச் செய்கின்றனரே. எப்படி அவர்கள் நன்கு பணிபுரிவர். நாளடைவில் மனமுடைந்து மந்தமடைகின்றனர். ஒரு தலைமை ஆசிரியரோ, உதவியாசிரியரோ ஜில்லா போர்டு பள்ளியில் மனச்சாட்சிக்கு மாறின்றி வேலை செய்கிறார் என்றால் அவரைப் பலர்க்குப் பிடிப்பதில்லை. ஏன்? தங்கள் மனம் போல் நடக்க இயலவில்லை என்ற காரணத்திற்காக. உண்மையாக ஊழியஞ் செய்பவனுக்கு ஜில்லா போர்டு ஊக்கமளிப்பதே இல்லை. அவர்க்குத்தான் பல இடையூறுகள் உண்டாக்குகின்றனர்–பிறர் சொற்கேட்டு. அவர் மனம் வெறுப்புற்று வேலையைவிட்டு நீங்கும்படியும் செய்கின்றனர். பிறகு எங்ஙனம் நல்ல ஆசிரியர் கிடைப்பார் அல்லது இருப்பார்? ஜில்லா போர்டு பள்ளிகளில் உண்மை உழைப்பாளிகள். சிலர் இருக்கலாம். அவர்கள் "கழுதைக்கு வாழ்க்கைப்பட்டு உதைக்கு அஞ்சினால் முடியுமா? என்று நினைப்பவர்கள். குறைந்த ஊழியமுள்ள இவ்வாசிரியர் தொழிலுக்குச் சிறிது சலுகையாவது இருந்தாலன்றோ மன அமைதி உண்டாகும். பணிபுரிய மனம் நாடும். இல்லையேல் பொழுது போக்காகத்தான் இருக்கும்.

பள்ளிக்கூடத்தின் பொறுப்பு முழுதும் தலைமை

ஆசிரியர்க்கே என்று கட்டளையிடுகிருர்களேயன்றித் தலைமையாசிரியரைப் பொறுப்பற்றவராக்க வேண்டுமென்பதான் செயல் முறையிலுள்ளது. ஏனெனில் தலைமையாசிரியர் உதவியாசிரியர்களின் ஒழுங்கீனத்தையோ, கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமையையோ பற்றிச ஜில்லாபோர்டு தலைவற்கு எழுதினுல் அதைப்பற்றிக் கவனிப்பதேயில்லை. அதற்கு மாருக எல்லா ஆசிரியர்களையும் தொலையிடங்களுக்கு மாற்றி விடுவதாக அச்சுறுத்தப்படுகிறது. மாற்றவும் படுகிறது. இதில் ஏதாவது அருத்த முண்டா? என்று கேட்கின்றேன். குற்றமிழைத்தவனையும், செய்யாதவனையும் மாற்றினுல் குற்றம் செய்தவனுக்குத்தன்னுல் எல்லோரும் மாற்றப்பட்டார்களே என்ற மகிழ்ச்சியேயன்றி அவனது குற்றத்தை உணரமாட்டான். ஒருவன் குற்றம் செய்தால் ஊராருக்கெல்லாம் தண்டனையா? குற்றவாளி தனது உதவாக்கரை முயற்சியால் அடைந்த வெற்றி குறித்து மகிழ்ந்து எங்கு சென்றுலும் இந்த முரண்பாடான முயற்சியைப் பயன்படுத்த முற்படுகிருன். அவனைக் குற்றத்திற்கேற்ற தண்டனை கொடுத்து அதே பள்ளியில் இருத்தினுலொழிய அவனுக்கு நற்புத்தி வராது. அவனுக்கு மாற்றல் வேண்டும் என்பதற்காகத் தலைமையாசிரியரிடம் முரண்பாடாக நடந்தால் எல்லோருக்குமே மாற்றல் கிடைத்துவிடுமென்று மகிழ்ந்து செயலாற்றுகிருன். இந்த ஜில்லாபோர்டாருக்குத் தெரியாதா? தெரிந்தாலும் சிபாரிசுக்குச் சலுகை போலும்.

தலைமையாசிரியர்க்குத் தனித் தலைவர் (Special officer) ஆட்சியில் இருந்த மதிப்பு இல்லை. அலுவலின் அருமை அலுவலில் இருப்பவர்களுக்குத்தானே தெரியும். பள்ளிக்கூட நிர்வாகத்திலோ, பாடம் நடத்துவதிலோ ஒரு ஆசிரியர் தவறினுல் அது குறித்துத் தலைமையாசிரியர் எழுதினுல் அதைக் கவனிப்பதுமில்லை. தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதுமில்லை. இந்தத் தலைவர் ஆட்சியில் குற்றத்திற்கேற்ற தண்டனை உடன் அளித்தாலன்றே மறுமுறை அக்குற்றம் நிகழாது. ஏனைய ஆசிரியர்க்கும் ஒரு படிப்பினையாகும். அப்படித் தலைமை ஆசிரியர் நிர்வாகத்தில் ஐயம் ஏற்பட்டால் நேரில் வந்து பார்வையிடுவதன்றிப் பிறர் கூறுவதைக் கொண்டு செயலாற்றுவது சரியன்று. பள்ளிக்கூடங்கள் சரியாக நடக்கவேண்டும், மக்கள் கல்வியில் முன்னேற வேண்டும், என்ற நோக்க முடையவற்கன்றே அவ்வெண்ணம் தோன்றும். கல்விக் கண்காணிப்பாளர் வேண்டா

வெறுப்பால் எழுதுவதையும், ஊரார் புகார் கூறுவதையும் கேட்டு எதுவும் செய்வது நேர்மையாகாது. நிரவிசாரித்தன்றோ தீர்ப்பளிக்க வேண்டும். குற்றம் செய்தவனுக்கு ஊக்கமளிப்பதும், சொன்னவனுக்குத் தண்டனை யளிப்பதுமே ஜில்லா போர்டு தொழிலாக இருந்தால் பள்ளியின் நிர்வாகம், கல்வி முன்னேற்றம், இவை எங்ஙனம் சீர்பெறும்? எனைய ஆசிரியர் அட்டகாசத்திற்கே நாடோறும் அஞ்சியிருக்கும் தலைமையாசிரியர் எப்படிப் பாடம் நன்கு நடத்த முடியும்? இது ஜில்லா போர்டாருக்குத் தெரியாமற் போனதென்ன? தலைமையாசிரியரிடம் நம்பிக்கை வைத்துக் குற்றம் புரியும் ஆசிரியர்களைத் நீர விசாரித்து தக்க தண்டனை அளித்தால் பள்ளிக்கூடம் என் ஒழுங்காக நடக்காது? பயமும் இருக்கும். அதைவிட்டு எல்லோரையும் நினைத்த இடங்களுக்கு மாற்றிவிடுவதனால் என்ன பயன் என்பது விளங்கவில்லை.

நல்ல மாட்டையும், சண்டி மாட்டையும் சமமாக நினைத்தால் நல்ல மாடும் சண்டியாகுமேயன்றி நல்ல நிலைமைக்கு வராது.

ஆசிரியர்களை அவர்கள் மனதிற்குப் பிடிக்காத இடங்களுக்கு மாற்றி விடுவதனால் பள்ளிக்கூடத்தில் நன்றாக வேலை செய்வார்கள் என்று எதிர்ப்பார்ப்பது அறிவீனமே. பலவித இன்னல்களுக்கிடையே எங்ஙனம் மனம்:நன்றாக வேலை செய்ய நாட்டமுறும்?

நாட்டு மக்களின் கல்வி முன்னேற்றமே ஜில்லா போர்டாரின் நோக்கமாக இருந்தாலன்றோ நாடு நலமுறும். தங்களுக்கு வருகிற தேர்தலில் வெற்றிக்கன்றோ இந்த ஆட்சியைப் பயன் படுத்திக்கொள்கின்றனர். தங்களுக்குப் பதவியும், அதிகாரமும் பெரிதேயன்றி ஏழை மக்களின் கல்வியைப் பற்றிக் கவனிப்பவர் மிகக் குறைவே. ஜில்லா போர்டு கல்வி நிலையங்கள் கண் துடைப்பு வேலையேயன்றி உண்மை உழைப்பல்ல என்பது அவற்றின் ஆட்சியை உற்று நோக்குவார்க்குப் புலனாகாமற் போகாது. இதனால் உண்மையாகவே உழைக்கும் ஜில்லா போர்டாரைக் குறை கூறுவதாகக் கருதக் கூடாது. ஏனெனில் குற்றமுள்ள நெஞ்சு தானே குறுகுறுக்கும்.

தற்காலம் ஜில்லா போர்டு கல்வி நிலையங்களுக்குக் ஆசிரியர் கிடைப்பது அரிதாகி வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில் ஜில்லா போர்டு பள்ளிகளுக்கு ஆசிரியர் (நல்ல ஆசிரியர்) வேலைக்கு வரவே மாட்டார்கள். உள்ளூரில் இதே ஊதியத்தில் மாற்றல் இன்றி வசதியுடன் வசிக்க விரும்புவ

தன்றிச் ஜில்லா போர்டார் வெறுப்புக்கும் விருப்புக்கும் ஆளாகி அல்லற்பட விரும்புவரா? அவ்வசதியால் "உதவி பெறும் பள்ளிகள் நன்கு நடைபெறுகின்றன" என்ற பொது அபிப்பிராயமும் நிலவுகின்றது. 'ஜில்லா போர்டார் நினைத்தவுடன் தமக்கு வேண்டியோர்க்கு இடமளிக்க மாற்றுகின்றனர். நல்ல உழைப்பாளியை இக்கால வாழ்க்கை நெருக்கடியில ரூ. 49-ல் எங்ஙனம் ஒரு குடும்பம் நடத்த முடியும்? இப்பொழுது கிராம வாழ்க்கை நகரத்தைவிடக் கடினமாகியுள்ளது. இக்குறைந்த ஊதியத்தால் அல்லற்படும் ஆசிரியரை அடிக்கடி மாற்றுவதால் மனமுடைந்து கடமையைச் சரிவரச் செய்வதில் நாட்டமிழக்கின்றார். இப்படி நினைப்பதும் பந்தாடப் படுவதைவிட எங்கேயாவது ஒரு உதவிப் பள்ளியில் சென்று வேலை பார்க்க விரைந்து ஐந்து ரூபாய் குறைந்தாலும் பரவாயில்லை யென்று போய்விடுகின்றார். ஏன்? மாற்றல் பயமில்லாமல் அமைதியாக வாழலாமன்றோ? இப்போதே ஜில்லா போர்டு பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பலர் இராஜினமாக் கடிதங்கள் எழுதிவிடத் துணிந்துவிட்டார்கள். பல கடிதங்கள் வந்துமுள்ளன. இன்னும் பல எதிர் நோக்கியுள்ளன. இதற்கு முதற்காரணம் ஜில்லா போர்டின் திடீர் மாற்றமும், சீர்கேடான நிர்வாகமுமாகும்.

கிராமத்தின் பெருந்தனக்காரர், செல்வாக்குடையோர், மொட்டைக் கடிதம் இவற்றிற்கு மதிப்புக் கொடுத்து உண்மையான உழைப்புக்கு உயர்வளிக்காமையும் மற்றுமொரு காரணம்.

தமது பதவியைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டி ஆசிரியர் மாற்றப் படுகின்றனர் ஊராரின் உதவாக் கரையார் சிபாரிசுக்காக.

ஜில்லா போர்டு கண்காணிப்பில் உழைப்பாளிக்கு உயர்வில்லை. உதவாக்கரைகளாயினும் சிபாரிசுக்குத்தான் உயர்வு. இந்நிலையில் நல்ல ஒழுக்கம், நல்ல உழைப்பு, நல்ல குணம் உள்ள ஆசிரியர்கள் எப்படிக் கிடைப்பர்? கிடைத்தாலும் இருப்பாரா?

எனவே, நாட்டாண்மைக் கழகத்தார் கல்வி நிலையங்களைக் கல்வி முன்னேற்றத்தைக் கருதிக் கண்காணித்தாலன்றிப் பள்ளிக்கூடங்கள் நன்கு நடைபெருது. அவற்றிற்காகச் செலவிடப்படும் பணமும் வீணேயாகும். மேலும் பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய தேவைகளைப் பற்றித் தலைமையாசிரியர் எழுதினலும் உடன் கவனிப்பதேயில்லை. பிறகு எப்படிப் பள்ளிக்கூட வேலை

கள் ஒழுங்காக நடைபெற முடியும்? இதெல்லாம் தெரிந்தும் சிலர் தெரியாததுபோலிருக்கின்றனர்.

கல்வி நலன் கருதிப் பள்ளிகள் நடத்தப்படக் கீழ்க்கண்ட குறிப்புக்களை யுளங்கொண்டு செயலாற்றினல் அன்றிக் கல்வி முன்னேற்றம் குதிரைக் கொம்புதான்.

1. நாட்டாண்மைக் கழகத்தாரிடம் தாங்கள் மக்கள் தொண்டர் என்ற எண்ணம் நிலைத்திருக்கவேண்டும்.

2. தங்கள் அதிகாரத்தைப் பாரபட்சத்துடன் பயன்படுத்தாது பொது நோக்குடனும், நீதியுடனும் நடக்க வேண்டும்.

3. குற்றம் புரிந்தவர்க்குத் தண்டனை யளிக்க வேண்டுமேயன்றி வேண்டியவர்க்கொன்று வேண்டாதவர்க்கொன்று செய்தல் கூடாது. ஒருவர் குற்றத்திற்கு எல்லோருக்கும் தண்டனை யளித்தல் கூடாது.

4, கல்வி நிலையங்களின் தலைமையாசிரியர்க்கு மதிப்புக் கொடுத்துப் பொறுப்பாளராக்க வேண்டும். ஏனெனில் கிட்டேயிருந்து வேலையைக் கண்காணிப்பவர் அவரன்ருே?

5. 'ஆசிரியர்களைப் பள்ளி விட்டுப் பள்ளி அடிக்கடி மாற்றல் கூடாது. நல்ல உழைப்பாளிக்கு உதவ வேண்டும். ஒரே ஊரில் பல ஆண்டுகள் இருந்தாலும் குற்றமில்லை. நமக்கு வேண்டுவது உண்மையான உழைப்புதானே.

6. குற்றம் புரிந்த ஆசிரியர்களை நேரில் சென்று தீர விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டுமேயன்றிப் பிறர் சொற்கேட்டு மாற்றுவதோ, தண்டிப்பதோ கூடாது.

7. ஆசிரியர் வசிப்பதற்குப் பள்ளிக்கூடத்திற்கு அண்மையிலேயே விடுதி கட்டிக் கொடுக்க வேண்டும் - இரயில்வே ஊழியர்களைப் போல. ஏனென்ருல் கிராமங்களில் வீடுகிடைப்பது மிக அரிதாயிருப்பதால் ஆசிரியர்கள் குடும்பம் வைக்க இயலாது அல்லற்படுகின்றனர். பள்ளிக் கூடமும் சரியாக நடத்த முடிவதில்லை - அங்கு மிங்கும் அலைவதனல். வாடகை பெற்றுக் கொண்டாலும் வீடு கிடைத்தால் போதும்.

8. ஒரு ஆசிரியரைப் பல ஆண்டு ஒரே ஊரில் இருக்க விடுவதும், சிலரை மட்டும் உடனுக்குடன் மாற்றுவதும் நிறுத்தப்பட வேண்டும். இதனல் பள்ளி நிர்வாகத்திலும், கல்வி முன்னேற்றத்திலும குறைபாடுண்டாகிறது. ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு ஆண்டிற்குள் பத்துமுறை பத்து ஆசிரியரைமாற்றிவிட்டு ஆண்டு இறுதியில் பள்ளிக்கூடத்தில் கல்வி முன்னேற்றம் குறை

யுக்குத் தலைமையாசிரியர் காரணம் காட்டுவாராக என்று கட்டளை பிறப்பிப்பதில் ஏதேனும் பொருளுண்டா?

9. பள்ளிக்கூடத்தின் முன்னேற்றங் குறித்தும், நிர்வாகங் குறித்தும் தலைமையாசிரியர் வேண்டுவனற்றை உடனுக்குடன் கவனித்துதவ வேண்டும்.

10. ஆசிரியர் மிகுந்திருக்கும் பள்ளிகளிலிருந்து இல்லாத விடங்களுக்கு மாற்றிக் கல்வி முன்னேற்றத்திற்குதவ வேண்டுமேயன்றிச் சிபாரிசுக்காக மாற்றல் இருப்பது கூடாது.

11. நாட்டாண்மைக் கழகப் பொறுப்பாளர்கள் மக்களின் நன்மை கருதிப் பாடுபட வேண்டுமேயன்றி தன்னலமும், தன் சுற்றத்தார், வேண்டியவர்கள் நலனைக் கருதிப் பணி புரிதல் நிறுத்தப்பட வேண்டும். அஃது குடியரசு ஆட்சிக்கு மாறுபட்ட செயலாகும்.

12. நல்ல முறையில் மேற்கண்டவாறு பள்ளிகளை நடத்த இயலாதாயின் அரசியலாரிடம் விட்டு விடுவதே நன்றாகும்.

கிராமங்களுக்கும் நன்மையேற்படும். கல்வி முன்னேற்றமுற்றுக் கிராமம் சீர் பெறும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதே நாட்டாண்மைக் கழகத்தார் குறிக்கோளாக இருக்க வேண்டும்.


## ஆசிரியர் தேவை

ஹையர் கிரேடு போதனா முறை பயிற்சியில் தேறிய இரண்டு ஆசிரியர்கள் தேவை. சம்பளம் சர்கார் திட்டப்படி மாதாமாதம் கொடுக்கப்படும்.

மானேஜர்

**மோஹமேதட் எய்டெட் எலிமெண்டரி பாடசாலை**

தொட்டிய பட்டி, வையப்பமலை P. O.

இராசிபுரம் (சேலம் ஜில்லா)

ஹையர் கிரேட் பெண் ஆசிரியர் தேவை. 1–6–50–க்குள் விண்ணப்பம் செய்யலாம்.

தலைமை ஆசிரியர்

**நேஷனல் எலிமெண்டரி பாடசாலை**

கண்டமங்கலம், பாலப்பாவூர் P. O.

திருநெல்வேலி ஜில்லா.

# 8-ம் வகுப்பு சர்க்கார் பரீக்ஷை

## வினாத்தாள் பற்றிக் குறைகள்

●

### மாணவர் திகைப்பு பற்றி முறையீடு;

இம்மாதம் 4, 5-ந் தேதிகளில் நடந்த இப்பரீக்ஷையில் கணித கேள்வித்தாளில் இரண்டாம் கணக்கில் "செலவு செய்து" என்ற வார்த்தை மொழி பெயர்ப்பில் சேர்க்கப்படவில்லை. நான்காவது கணக்கில் பங்கு என்பதற்குப் பதிலாகப் பங்கு அதிகம் எனக் கொடுக்கப்பட்டிருந்தது. 7-ஆவது கணக்கில் 'ஆனது, ஆனது' என கொடுத்தது அர்த்தமில்லாமலிருக்கிறது. இவ்விடத்தில் 'மொத்தமாயிற்று' என்று கொடுக்கப்பட வேண்டும். 8-ம் கணக்கில், அளவு விகிதப்படி என்ற வார்த்தை விடப்பட்டிருக்கிறது. 9-ஆம் கணக்கில் கடைசி வரியில் பழங்கள், என இரு தடவைகள் கொடுக்கப்பட்டு வாக்கிய அமைப்பும் சரியில்லாததால் மாணவர்கள் திகைக்கும்படி நேரிட்டது.

பூகோள வினாத்தாளில் கேள்வி 11 (எ)ல் 'பருத்தி சாமான்கள்' என்பதற்குப் பதிலாக 'பருத்தி' எனக் கொடுக்கப்பட்டிருந்தது. பொதுவாக கணித வினாத்தாள் இம்மாதிரி கொடுக்கப்பட்டிருந்ததால் ஏராளமான மாணவர்கள் ஏமாற்றமடைந்து தேர்ச்சிபெற முடியாமலிருக்கிறது. அரசாங்கத்தார் இப்பரீக்ஷை சம்பந்தமாக ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என, ஆர். வி. சர்மா உயர்தர ஆரம்ப பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ டி. ராமசேஷன எழுதுகிறார்.

### கணக்கு வினாத்தாள் பற்றிய குறைகள்

இவ்வருடம் நடைபெற்ற எட்டாம் வகுப்பு அரசாங்கப் பரீட்சையில் கணக்கு வினாத்தாளைக் கவனித்தவர்கள், அதில் எவ்வளவு கவலையீனமாகவும் தெளிவற்ற முறையிலும் பதங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவார்கள். 9 கணக்குகள் அடங்கியுள்ள வினாத்தாளில் 4 கணக்குகள் தெளிவற்ற முறையில் இருந்தால் 10, 12 வயது நிரம்பப் பெறாத பாலர்கள் என்ன செய்வார்கள்?

ப. கணக்கில் ஒருவன் 1000 மாம்பழங்கள் ரூ. 15 விதம் வாங்கினான். 1000 ரூ. 2-8-0 விதம் வெளியூருக்கு அனுப்பினான் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. எத்தனைக்கு ரூபாய் 15 விதம் 1000 மாம்பழம் வாங்கினான் என்று தெரியாமலும், 1000 மாம்பழம் ரூ. 2-8-0 விதம் விற்ற

தாக எண்ணியும் மாணவர்கள் எண்ணியும் திகைத்தனர். 1000-க்கு 2-8-0 செலவு செய்து வெளியூருக்கு அனுப்பினுன் என்று இருந்தால் தெளிவாய் இருக்கும்.

IV. கணக்கில் "வீட்டின் விலை பாங்கியில் உள்ள ரொக்கத்தைக் காட்டிலும் $1\frac{1}{2}$ பங்கு அதிகம். நிலம் வீட்டின் விலையைக் காட்டிலும் 2 பங்கு அதிகம், என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் மாணவர்களை வீணுகக் குழப்ப மடையச் செய்துவிட்டது. வீட்டின் விலை ரொக்கத்தைப் போல் $1\frac{1}{2}$ பங்கு என்றும், நிலம் வீட்டைப்போல் 2 பங்கு என்றும் இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

VII. கணக்கில் "மூன்று வருஷங்களுக்குப் பிறகு ஒரு பாங்கில் 'தனி வட்டிக்குப போட்டதில் மூன்ரும் வருடக் கடைசியில் ரூ. 728 ஆனது" என்றிருக்கிறது. 'மூன்று வருஷங்களுக்குப் பிறகு' என்றும் 'மூன்ரும் வருடக் கடைசியில் என்றும்' ஒரே வாக்கியத்தில் கொடுத்திருப்பது குழப்பம் உண்டாக்குகிறது 'ஒரு தொகை மூன்ரும் வருஷக் கடைசியில் ரூ. 728 ஆனது என்று கொடுத்திருக்கலாம்.

ix. கணக்கில் "வரிசையின் முதலிலிருந்து இருக்கும் பழங்கள் 6-வது மரத்தில் எவ்வளவு பழங்கள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடி?" என்றிருக்கிறது. "இருக்கும் பழங்கள" என்ற வாசகம் அனுவசியமாக இருந்து பெரிய திகைப்பை யுண்டாக்குகிறது.

மேலே எடுத்துக் காட்டப் பட்ட குறைகளை சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கவனித்து தக்க பரிகாரம் செய்வார்கள் என்று நம்புவதாக திருச்செந்தூர் தாலுக்கா ஆசிரியர் சங்கத் தலைவர் ஸ்ரீ. ஜீ. வெங்கடாசலம் எழுதுகிருர்.

## இ. எஸ். எல். ஸி. அரசாங்க பொதுப் பரீட்சை

இந்த சென்டரில் 4, 5-4-50 தேதிகளில் எட்டாவது வகுப்பு அரசாங்கப் பொது தேர்தல் நடை பெற்றது. இதில் 5-4-50 காலை கணிதக் கேள்வி இரண்டிற்கு சரியான ஆங்கில விஞத்தாள் கூடவே அனுப்பாததிஞல் மாணவர்கள் அச்சுபிழை என்றே எழுதி யுள்ளதாகத் தெரிகிறது.

கணக்கில் ஒருவன் 1000 மாம்பழங்கள் ரூ. 15 வீதம் வாங்கினுன் 1000 ரூ. 2-8-0 வீதம் வெளியூருக்கு அனுப்பினுன், அனுப்பினதில் 16 சதவிகிதம் அழுகிப் போயின. 20 சதவிகிதம் லாபம் அடைய மீதி பழங்களை நூறு என்ன விலைக்கு விற்க வேண்டும்?

அனுப்பினுன் என்பது விக்ரயமாக அனுப்பியதா?

சிலவா? என்பது தெளிவு படுத்தப்படவில்லை.

தமிழ் வினுத்தாள்களுடன் ஒரு பிரதி இங்கிலீஷிலும் அனுப்பியிருந்தால் இந்த சந்தேகம் தீர்ந்திருக்கும். இது போன்ற குறைகளை நீக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். இத் தேர்தலில் கலந்து கொண்டவர்களுக்கு சலுகை காட்டுவது பற்றியும் அதிகாரிகள் கவனிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## மொழி பெயர்ப்பின் நேர்த்தி!

உயர்தர ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் அவசரக் கூட்டம் ஒன்று மதுரை, மைட்ராஸ் இ. எஸ். எல். ஸி. இன்ஸ்டிடியூட், டைரக்டர் எஸ். வீ. ராஜையா தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

2, 4, 9–ம் கணக்குகளின் மொழி பெயர்ப்பு பிள்ளைகளைத் திணற அடிப்பதாக இருப்பதும் மற்றும் இதர கணக்குகளின் நோக்கம் நேர் முகமற்றிருப்பதும் மிகவும் வருந்தத்தக்கது.

6-ம் கணக்கு இந்த வகுப்பிற்கு கேட்கக்கூடிய கணக்கு அல்ல. ஆனால், அதில் எளிதாக அர்த்தம் புரிந்துகொள்ள முடியாதபடி வார்த்தையில் சூழ்ச்சி செய்திருப்பது கணித மூளைக்கு விசித்திரமாகத் தோன்றுவதுதானது வருந்தத்தக்கது.

இப்படி சிறு பிள்ளைகளின் மூளையை கலங்க வைத்து அர்த்தம் புரியாதவாறு செய்து, கணக்கில் பரிசோதிப்பது வாழ்க்கையிலோ அல்லது அவர்களது பின் தேர்ச்சிக்கோ பிரயோஜன மிராது என்பதைக் குறிப்பிட்டு அநேக மாணவர்கள் இதனால் பாதிக்கப்படாதபடி கவனித்துக் கொள்ள உடனடியான ஏற்பாடு செய்யப்பட வெண்டும்.

மேற்கண்ட தீர்மானங்களை கல்வி மந்திரிக்கும் கல்வி இலாகா டைரக்டருக்கும் அனுப்ப தலைவரைக் கேட்டுக் கொள்ளப்பட்டு கூட்டம் முடிந்தது.

## எட்டாம் வகுப்பு சர்க்கார் பரீக்ஷையும் வினுத்தாள்களும்

இம் மாதம் 4, 5 தேதிகளில் நடந்த இப் பரீட்சையில் கணித கேள்வித்தாளில், 2-ம் கணக்கில் "செலவு செய்து" என்ற வார்த்தை மொழி பெயர்ப்பில் விடப்பட்டிருந்தது. 4-ம் கணக்கில், 'பங்கு' என்பதற்குப் பதிலாக 'பங்கு அதிகம்' என கொடுக்கப்பட்டிருந்தது. 7-ம் கணக்கில் 'ஆனது, ஆனது,' என இரு தடவை கொடுத்திருந்தது அர்த்தமில்லாமலிருக்கிறது. இவ்விடத்தில் 'மொத்த

மாயிற்று' எனக் கொடுக்க வேண்டும். 8–ம் கணக்கில் 'அளவு விகிதப்படி' என்ற வார்த்தை சேர்க்கப்படவில்லை. 9-ம் கணக்கில் கடைசி வரியில் 'பழங்கள்' என இரு தடவைகள் கொடுக்கப்பட்டு வாக்கிய அமைப்பும் சரியில்லாததால் மாணவர்கள் திகைக்கும்படி நேரிட்டது.

பூகோள வினு 11. (a)-ல் 'பருத்திச் சாமான்கள்' என்பதற்குப் பதிலாக 'பருத்தி' எனக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் மாணவர்கள் பெருத்த குழப்பம் அடையும்படி நேரிட்டது. பொதுவாக கணித வினுத்தாள் இம்மாதிரி கொடுக்கப்பட்டிருந்ததால் ஏராளமான மாணவர்கள் ஏமாற்றமடைந்து தேர்ச்சி பெற முடியாமலிருப்பதால் அரசாங்கத்தார் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## எய்டெட் பள்ளி உபாத்தியாயர்களுக்கு சம்பள உயர்வு

சென்னை மாகாண எய்டெட் எலிமெண்டரி ஸ்கூல்களைச் சேர்ந்த ஹையர் கிரேடு உபாத்தியாயர்களின் சம்பளம் ரூ. 25-லிருந்து ரூ. 30-ஆக உயர்த்தப்படும். இந்த ரூ. 5 சம்பள உயர்வில் சர்க்கார் ரூ. 2–ம், மானேஜ்மெண்டார் ரூ. 3-ம் கொடுப்பார்கள். எந்த மானேஜ்மெண்டாவது இந்த மூன்று ரூபாயை கொடுக்கத் தவறினால் சர்க்கார் அவைகளுக்கு அளிக்கும் மான்யத் தொகையில் இந்தப் பணத்தைப் பிடித்துக்கொண்டு கொடுக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

சர்க்கார் இந்த திட்டத்தை ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து அமலுக்குக் கொண்டுவர உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

அடிப்படைச் சம்பளம் 30 ரூபாயுடன் வழக்கமான விலைவாசி கிராக்கிப்படியும் உண்டு.

இந்த ஏற்பாட்டினால் சர்க்காருக்கு வருஷத்துக்கு ரூ. 38 லக்ஷம் அதிகச் செலவாகும் எனத் தெரிகிறது.

இவை தாற்காலிகமாகச் செய்யப்பட்டுள்ள முடிவுகள் சம்பந்தப்பட்ட கமிட்டிகள் அங்கீகரித்த பின் இந்தத் தொகைக்கு உப மான்யம் கோரி அசெம்பிளியில் தீர்மானம் கொண்டு வரப்படும்.

# போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்.

## G. O. No. 112, (16-1-50)

## ரிகார்டு ஷீட்

ஆரம்பப் பள்ளியை விட்டு விலகி, ஒரு வருடம் கழித்து மாணவன் படித்ததற்கு அடையாளமாக ரிகார்டு ஷீட் வேண்டுமென்று கேட்டால், அம்மாணவனிடத்திலிருந்து 8 அணா வசூலித்த பிறகு கொடுக்கலாம். முதலில் கொடுத்த ரிகார்டு ஷீட் தவறி விடப்பட்டு, மறுபடியும் டூப்ளிகேட் ரிகார்டு ஷீட் (Duplicate Record Sheet) கேட்கப்பட்டால் அம்மாணவனிடத்தில் 1 ரூபாய் வசூலிக்கலாம்.

## G. o. No. 649-(1-3-50)

## ஆசிரியர்களுக்கு கிராண்டு

1. கீழ்க் கண்ட நபர்களை தேர்ச்சிப் பெற்ற ஆசிரியர்களாகக் கருதி கிராண்டு கொடுக்கப்படும். மூன்று வருஷத்திற்குள் தேர்ச்சிப் பெற்ற ஆசிரியர்கள் தங்கள் (probationary Teachers certificate) பூர்த்திச் செய்யா விட்டால்,

2. ஆசிரியர் போதனாமுறைப் பயின்றும், போதனா முறை பரீட்சையில் தேர்ச்சிப் பெறா விட்டால்

3. S. S. L. C. வரையில் படித்துத் தேர்ச்சிபெறாத ஆசிரியர்கள் (இவர்களுக்குச் சலுகை 30-6-50 வரையில்தான்)

4. Intermediate; B. A. படித்தும் போதனா முறையில் தேர்ச்சிப் பெறாதவர்கள்.

## G.o. No 636. (1-3-50)

## ஆசிரியர்கள் 60 வயது வரை வேலை செய்ய சலுகை.

ஐம்பத்தைந்துக்கு மேல் வயதான ஆசிரியர்கள் தனிப்பட்ட மானேஜ் மெண்டுகளால் (private Management) நடத்தப்படும் பாடசாலைகளில் மட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகள்படி அமர்த்திக் கொள்ளலாம்.

1, 55 வயதான ஆசிரியரை 60 வயதாகும் வரை அமர்த்தலாம்.

ஆனால், அவருடைய சர்வீஸ் ஒவ்வொரு வருடமாக நீடிக்கப்பட வேண்டும்.

2. ஆசிரியர்களுக்கு உத்தியோகம் கொடுக்கும் பொழுது மானேஜ் மெண்டில் பொறுப்புள்ளவர்கள், அவர் கொடுக்கும் உத்தியோகம், அதற்கேற்படுத்தப்பட்ட சம்பளம், அல்லது கிரேட், வேலை செய்ய வேண்டிய காலம், இவைகளை அவ்வாசிரியருக்குக் கொடுக்கும் உத்தரவில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. சம்பளமும், சர்வீஸ் கால அளவும் தவிர மற்ற விஷயங்களில் நிரந்தரமான ஆசிரியர்களுக்கு (peramanent) காட்டப்படும் சலுகை இவர்களுக்குங் காட்டப்பட வேண்டும்.

4. ஆனால், இவர்களை டைரக்டர் உத்தரவில்லாமல் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படக்கூடாது.

5. டைரைக்டர் உத்திரவு அல்லாது 55 வயதான ஆசிரியருக்கு கொடுக்கப்படும் சம்பளம், அந்தப் பாடசாலையில் 55 வயது உட்பட்ட ஆசிரியருக்கும் கொடுக்கப்படும் சம்பளத்திற்கு மேல் அதிகமாக இருக்கக்கூடாது.

6. சிலக்குறிப்பிட்ட சமயங்களில் 60 வயதுக்கு மேற்பட்டுங்கூட ஆசிரியராக வேலைச் செய்ய டைரைக்டர் அனுமதித்தரலாம்.

## G. o. No. 336 (8-2-50)

## பாடசாலை வயது நிர்ணயம்.

## School Age

பாடசாலை வயதென்பது ஒரு மாணவன் 6 வயது முதற்கொண்டு 5 வது வகுப்பு படித்து முடிக்கும் வரையில் அல்லது 12 வயது பூர்த்தியாகும் வரையிலுமாகும்.

டைரக்டர் அவர்களுக்கு ஒரு பிள்ளையின் பாடசாலை வயதைக் குறைக்கவோ அதிகப் படுத்தவோ அதிகாரமுண்டு. கட்டாய இலவச கல்வித் திட்டம் அமுலிலிருக்கும் ஜில்லா போர்ட்டாருக்கு உட்பட்ட இடங்களில், 1945 ஆகஸ்டு முதல் தேதியிலுள்ள பிள்ளைகளுக்கு, ஆண்பிள்ளைக்கு பாடசாலை வயது 14-ம் பெண்பிள்ளைக்கு 12 ஆகும்.

பாடசாலை வயதுள்ள பிள்ளைகளை எக்காரணத்தைக் கொண்டும் தொடர்ச்சியாக 6 வருஷத்திற்கு மேல் ஒரு பாடசாலையில் படிக்கும்படி தொந்தரவு செய்யக் கூடாது.

# சுக நெறி

## (சுகமாய் வாழ நேர்மை அவசியமானது)

---ஃ---

1. தினந்தோறும் விடியற்காலம் ஐந்து மணிக்கு விழித்து எழுந்திருக்க வேண்டும்.

2. விழித்தவுடன் வாயலம்பி நீராகாரம் அல்லது சுத்த தண்ணீர் அளவுடன் அருந்த வேண்டும்.

3. மலஜலங்கழித்தல், ஆலு, வேலு, பூலா, முதலிய குச்சிகளால் பல்துலக்கிக் காலைக்கடனை முடிக்க வேண்டும்.

4. பிராணாயாமம், ஆசனம், தேகப்பயிற்சி முதலியன தங்கள் வயதிற்கும சக்திக்கும் தகுந்தபடி செய்தல் வேண்டும்.

5. மனதில் யாதொரு நினைப்பையும் வராது தடுத்து, தன்னிஷ்ட தெய்வத்தை நிஷ்காமியமாக சிந்தனை செய்ய வேண்டும்.

6. நாள் தோறும் சூரிய வெளிச்சமும் நல்ல காற்றும் உடம்பில் படும்படி செய்துக் கொள்ளல் வேண்டும்.

7. நதியிலும், குளத்திலும், வெந்நீரிலும், தண்ணீரிலும் முழுகினாலும் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் மாத்திரம் வெந்நீரிலேயே முழுக வேண்டும்.

8. காலையில் சுலபமாக சீக்கிரத்தில் ஜீரணிக்கக் கூடிய உணவு அருந்தி நடுப்பகலில் ஜீவசத்துள்ள கீரைக் கறிகளையும், கிழங்கு காய்கறிகளில் சிலவும் வித்யானங்களில் பலவும் உருக்கின நெய்யும், காய்சின நீரும், பெருக்கின மோரும் சேர்த்து மித உணவு அருந்துதல் வேண்டும்.

9. ஜீவ சத்துள்ள கைக்குத்தல் அரிசியும், கஞ்சி வடிக்காத சாதமும், சத்து அழியாது பக்குவப்படுத்தப்பட்ட கறிகளும் புசிக்க வேண்டும்.

10. பசி எடுப்பதற்கு முன் உண்பதும்; பழங்கறி அருந்தலும், இளந்தயிர் விரும்பலும், பகலில் தூங்கலும், மலஜல மடக்கலும், பகலிற் புணர்தலும், இரவில் கண் விழித்தலும் கூடாது.

11. மனதில், ஆசை, கோபம், பொறாமை, அச்சம், கவலை முதலியவைகளை ஒழித்து நல்லெண்ணத்தோடு நிர்மலமாக ஆத்ம சக்தியை வளர்க்க முயல வேண்டும்.

---

அறநெறிக் கழக வெளியீடு நெ. 2

---

# பாடப் புத்தகங்கள் எப்படி அமையவேண்டும்?

தற்போது நம் நாடு அடிமை நாடு அல்ல—ஆங்கில ஆட்சியில் இருந்ததைப்போல. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-க்கு அப்பால் அடைந்து விட்டோம் சுதந்திரம் நம் நாட்டில். ஆகவே தற்போது அரசியலிலும் சமுதாய சீர்திருத்தத்திலும் மக்களுள் தீவிரமான புரட்சி மனப் பான்மை நாளுககு நாள் வளர்ந்து கொண்டு வருகிறது. ஆதலின் இந்தப் புதிய போக்கில் நமது நாட்டுச் சிறுவர்களுக்குப் பாட புத்தகங்கள் நல்ல முறையில் அமைக்கப்படவேண்டியது மிக மிக அவசியம்—நமது நாடு மற்ற நாடுகளைக் காட்டிலும் செல்வத்தில் மட்டுமல்ல, வீரத்தில் மட்டுமல்ல, உயர்ந்த நாகரீகத்திலும் பண்பாண்டிலும், கல்வியிலும் சிறந்து விளங்கவேண்டுமானல். நம் நாட்டில் தோன்றிய புத்தர், அசோகர், காந்தியடிகள் இவர்கள் காட்டிய சிறந்த வழிகளையும் பொன் மொழிகளையும் நாம் கடைபிடிக்கவேண்டும்.

1. பிள்ளைகளுக்கு எழுதப் படிக்க மட்டும் கற்றுக்கொடுத்தால் பிரயோஜனமில்லை. நல்ல பகுத்தறிவு வளரவேண்டும். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பறந்த, சிறந்த நோக்கத்தை பிள்ளைகளுக்கு போதிக்கவேண்டும்.

2. மதங்களின் பேரிலும், ஜாதிகளின் பேரிலும் மக்கள் தனித்து வாழும் மனப்பான்மையை அறவே ஒழித்து, "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பறந்த நோக்கத்துடன் மக்கள் ஒன்றுபட்டு வாழும் முறையை பிள்ளைகளுக்குப் புகட்ட வேண்டும்.

3. தங்கள் தாய்நாட்டின் மீதும், தங்கள் நாட்டவர் மீதும், தங்கள் குடும்பத்தினர்கள் மீதும், நிரந்தரமான பக்தியையும் விஸ்வாசத்தையும் உண்டாக்கும் வண்ணம், பாடப் புத்தகங்களில் பாடங்கள் அமையவேண்டும். எந்த மதத்தினரையும் ஜாதியினரையும் புண்படுத்தும் வண்ணப் பாடப் புத்தகங்களில் எழுதப்படலாகாது.

4. எல்லாம் வல்ல இறைவன் ஒருவனுண்டு என்ற நம்பிக்கையோடு நிறுத்திக் கொண்டு, பல வகுப்பார்கள், பல மதக்காரர்கள், தொழுதுக்கொண்டுப் போகும் தனிப்பட்ட கடவுள்களைப் பற்றியெல்லாம் பாடப் புத்தகங்களில் விரிவாக எழுதப்படலாகாது.

5. நம் நாட்டில் தோன்றிய தேசிய வீரர்களைப் பற்றியும், அறிவாளிகளைப் பற்றியும், விஞ்ஞானிகளைப் பற்றியும் உள்ள சரித்திரங்கள் பல பாட புத்தகங்களில் அமைக்கப்படவேண்டும்.

6. தன் நாட்டைப் பற்றியும், அதில் காணப்படும் சரித்திரங்கள், பழைய நாகரீகங்கள், தேச பக்தி இவைகளைப் பற்றி புகழ்ந்து, பிள்ளைகள் பெருமை கொள்ளும் முறையில் நல்ல கருத்துக்களும், அறிவு வளர்ச்சிக்கான விஷயங்களும், பாடப் புத்தகங்களில் பொதிந்து கிடக்கவேண்டும்.

7. நாட்டில் மக்கள் கைக் கொள்ளும் பல மதங்களும், கொள்கைகளும், முறைகளும் பல வகையாயிருந்தபோதிலும் அத்தகைய முறைகளெல்லாம் கடைசியில் ஒரே கடவுளுக்குத்தான் வழிகாட்டுகிறதென்கிற கொள்கையை பிள்ளைகள் மனதில் பதியவைத்தல் வேண்டும். அதைவிட்டு ஒரு குறிப்பிட்ட மதம் அல்லது கொள்கை சிறந்ததென்றும், மற்றவை தாழ்ந்ததென்றும் அனுவசியமான விவாதங்களைப் பாடப் புத்தகங்களில் புகுத்தக்கூடாது.

8. நாட்டில் படித்தவர்கள் மட்டும் மேதாவிகளென்றும், உயர்ந்தவர்களென்றும், கைத்தொழில் புரிபவர் தாழ்ந்தவரென்றும், எண்ணும் வித்தியாசமனப்பான்மையை அறவே ஒழிக்கப்படவேண்டும். நாட்டிற்குத் தேவைப்படுபவர்கள் ஆள்பவர்களும், விஞ்ஞானிகளும், படித்தவர்களும் மட்டுமல்ல, பலவகைத் தொழிலாளிகளும் விவசாயிகளும் தேவையென்பதை வற்புறுத்த வேண்டும்.

9. கைத்தொழில் சம்பந்தமாகவும், சுகாதாரம் சம்பந்தமாகவும் சில பாடங்கள் அமைய வேண்டும்.

10. பாடப் புத்தகங்களில் வீரத்தையும் அறிவையும் ஊட்டும், சிறு சிறு பாடல்கள் சேர்க்கப்படலாம்.

11. ஒருவனது பணமும் அறிவும் திறமையையும் காட்டிலும், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற தத்துவத்தைக கைக்கொண்டு, பிறருக்கு உதவி செய்வதிலேயே கண்ணும் கருத்துமான சிறந்த சுபாவத்தைப் பிள்ளைகளுக்கு ஊட்டுவது அவசியமாகும்.

12. வேடிக்கையான கதைகளையும், பாட்டுக்களையும் பாடப் புத்தகத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

13. பிறருக்காக உழைக்கவும், பொது விஷயங்களில் விட்டுக் கொடுக்கும் தன்மையும், தியாக புத்தியுடன் உழைக்கவும், பிள்ளைகளுக்கு குணபாவம் ஏற்படும் வகை

பில் பாடங்கள் அமையவேண்டும்.

**14.** தன் தாய்நாட்டின்மீது மட்டும் பற்றுக்கொள்வதல்லாமல், அயல்நாட்டு மக்களிடத்திலும் விஸ்வாசமும், ஸ்நேகபாவமும் கொள்ளும் முறையில் பிள்ளைகளின் மனப்பான்மை வளர வேண்டும்.

**15.** உழவுத் தொழிலே நம் நாட்டின் ஜீவநாடியாதலின், உழவுத் தொழிலுக்கு ஓர் மதிப்பையும், உழுது பயிர் செய்யும் கிராமவாசிகளிடத்தில் அன்பாகவும், கௌரவமாகவும் நடந்துகொள்ளும் பழக்கத்தையும் பிள்ளைகளிடத்தில் பரப்பவேண்டும்.

**16.** பாடபுத்தகங்களில் பிள்ளைகளின் மனது கவர்ச்சி கொள்ளும் முறையில் பல சித்திரப் படங்கள் அமைக்கப்படவேண்டும்.

மேற்குறித்த குறிப்புக்கள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்றை சென்னை அரசாங்க புத்தகக் கமிட்டியார், பாட புத்தகங்கள் பிரசுரிப்பாளர்களுக்கு சமீபத்தில் அனுப்பியுள்ளனர். அதை நாம் மனமாற வரவேற்கின்றோம்.

தற்போது நம் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் உலவி வரும் பாடப் புத்தகங்களில பல, சமதர்மக் கொள்கைகளை அடிப்படையாக உடையன அல்ல. இங்கு சம தர்மம் என்பது, பல மதஸ்தர்களின் பிள்ளைகள் படிக்கும் ஒரு பாடசாலையில், மதங்களைப் பற்றி சமமாகப் போதிக்க வேண்டுமே ஒழிய, எம் மதத்தைப் பற்றியும் தாழ்ந்தியும், உயர்த்தியும் மறைமுகமாகவும் கூட சொல்லக் கூடாதென்பது. பாடப் புத்தகம் எழுதும் ஆசிரியர், சைவராக இருப்பின், சைவப் புராணக்கதைகளையும், வைணவராக இருப்பின் வைணவக்கதைகளையும், கிறிஸ்தவர்களாக இருப்பின் பைபிள் சம்பந்தப்பட்ட கதைகளையும் அவரவர்கள் எழுதும் பாடப் புத்தகங்களில் புகுத்தி இருப்பதை நாம் காண்கின்றோம்.

அவ்வாறு புத்தகங்கள் வெளி வருவதினால், கிறிஸ்தவ பாட சாலைகளில், மற்ற மத ஆசிரியர்கள் எழுதும் பாடப் புத்தகங்களை வைக்க முடியாமல், கிறிஸ்தவ தோழர்கள் எழுதும் புத்தகங்களையே தங்கள் பாடசாலைகளில் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அம்மாதிரியே மற்ற மதஸ்தர்களின் பாடசாலைகளிலும் பாடப் புத்தகங்கள் வைக்க நேரிடுகின்றது. இப்படிச் செய்வதனால் ஆசிரியர்களாகிய நாம் வகுப்புவாதத்தை நம்மை அறியாமலே, பாடசாலைகளில் வளர்த்து வருகிறோம்.

தற்போது நமது பிள்ளைகளுக்கு வேண்டியது அறிவு

வளர்ச்சிக்கான பஞ்சதந்திரக் கதைகள், தேச பக்தியை ஊட்டும் வழியில் சிறு கதைகள், நம் நாட்டின் விடுதலைக்குப் போராடிய காந்தியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்ற தேசிய வீரர்களின் சரித்திரங்களுடன், நம் தமிழ் வேந்தர்கள் ஆண்ட மதுரை, மகாபலிபுரம் போன்ற முக்கிய நகரங்களின் வரலாறுகள், மேல் நாட்டு விஞ்ஞானிகளின் சுய சரிதங்கள், அவர்கள் கண்டு பிடித்த விஞ்ஞான ஆராய்ச்சிகள், நம் பாடப் புத்தகங்களில் இடம் பெறுதல் வேண்டும் — நம் சுதந்திரம் பெற்ற இந்தியா முன்னேற வேண்டுமானுல். நம் நாட்டு பாடப் புத்தகங்கட்கு தந்தையாரான காலம் சென்ற கா. நமச்சிவாய முதலியார் பல ஆண்டுகட்கு முன் எழுதிய 'திராவிட பால பாடம்' 'புதிய தமிழ் பாடம்' முதலிய பாடப் புத்தகங்களைக் கவனித்தால், நாம் கூறிய முறையில் அப்பாடப் புத்தகங்கள எழுதியிருப்பது நன்ருக விளங்கும். அப்பெரியாரின் மறைவுக்குப் பிறகு அத்தகைய பாடப் புத்தகங்கள் மறைந்தது மிகவும் வருந்தத் தக்கது. கூடுமான வரையில் நாம் குறித்துள்ள முறைப்படி அமைந்த பாடப் புத்தகங்களை ஆரம்பாசிரியர்களாகிய நாம் பாடசாலைகளில் வைத்துப் பிள்ளைகளை சீர் திருத்தத் வேண்டியது மிக மிக அவசியம், நம் தமிழ் நாடு பலவகையிலும் முன்னேற வேண்டுமாறுல் — இன்றுள்ள சுதந்திர இந்தியாவில்.

## நமது புதுமுறை சங்க வாசகம்

காலஞ் சென்ற நமச்சிவாய முதலியாருடன் நெருங்கிப் பழகியும், அவர் அடிக்கடி தற்போதுள்ள பாடப் புத்தகங்களைப்பற்றி கூறி வந்த குறைகளைக் கேட்டும், கடந்த இருபது ஆண்டுகளாக ஆரம்ப ஆசிரியனுக இருந்து வரும் எனக்கு, ஓர் நல்ல பாடப் புத்தகம் வெளியிட வேண்டுமென்ற அவா வெகு நாட்களாக இருந்தது.

எனக்கு ஒழிந்த நேரங்களில் முதல் வகுப்பு முதல ஐந்தாம் வகுப்பு வரையில் **புதுமுறை சங்க வாசகம்** என்ற பெயருடன் பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளேன். இப் புத்தகங்கள் யாவும் சென்னைப் புத்தகக் கமிட்டியாரால் அங்கீகாரம் பெற்றும் இருக்கின்றன.

### முதற் பாட புத்தகம்

முதற் பாட புத்தகத்தில் தோழர் **டானியல்** அவர்கள் கைக்கொண்ட முறையை அனுசரித்து, **படம், பழம்** என்று முதலில் பிள்ளைகளுக்கு பதங்களையே கற்பிக்க வேண்டும் என்ற முறையைக் கைக்

கொண்டு, ஆறு மாதகாலத்தில் ஒரு மாணவன் முதல் வகுப்பை விட்டு, இரண்டாம் வகுப்புக்குப் போகும் முறையில் எழுதியுள்ளேன். இதன் விலை அணா 4.

## இரண்டாம் பாட புத்தகம்

இரண்டாம் புத்தகத்தில் முதலில் பதங்களை ஆரம்பித்து, அப் பதங்களையே கொண்டு வாக்கியங்களாக மாற்றி அமைத்திருக்கின்றோம். ஆறு மாதத்திற்குள் அப்புத்தகத்தை முடித்து விட்டு மூன்றும் வகுப்புக்கு மாறும் வகையில் சுருக்கமாக எழுதியுள்ளோம். இதன் விலை அணா 5.

## மூன்றாம் பாட புத்தகம்

மூன்றும் வகுப்பில் இருபத்திரண்டு பாடங்களும், மூன்று அபிநயப் பாட்டுகளும், ஓர் நாடகமும் சேர்த்து இருக்கின்றோம். விலை 7 அணாவாக வைத்திருக்கிறோம்.

## நான்காம் பாட புத்தகம்

நான்காம் வகுப்பில் இருபத்திரண்டு பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் முக்கியமானது மதுரையின் வரலாறு, பிள்ளைகளுக்கு வீரத்தையூட்டும் வகையில்'வீரத்தாய்'என்ற பாடம், குளோரோபாரம், நாய்க்கடி மருந்து முதலியவைகளைக் கண்டு பிடித்த லூயி பாஸ்டரின் சரித்திரம் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 8.

## ஐந்தாம் பாட புத்தகம்

ஐந்தாம் புத்தகத்தில் 23 பாடங்கள் சேர்க்கப் பட்டு இருக்கின்றன. அதில் முக்கியமானது ஒரு மாணவன் எல்லா மதங்களைப் பற்றியும் சுருக்கமாக தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், திருவள்ளுவர், இயேசுகிறிஸ்து முகமது நபி இவர்கள் யார்? உலகத்திற்கு என்ன செய்தார்கள்? என்ற அளவில் விளக்கப் பட்டிருக்கிறது. அதில் மிக முக்கியமானது நம் தமிழ் நாட்டுத் திலகமான வீரத்தமிழர் சிதம்பரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு மிகச்சுருக்கமாக பிள்ளைகளின் மனதில் பசுமரத்தாணி போல் ஊன்றுமாறு எழுதியுள்ளோம். இதன் விலை அணா 9.

மாதிரி புத்தகங்கள் வேண்டுபவர்கள் 0-3-3 அணா தபால் பில்லைகள் வைத்து அனுப்பினுல் அனுப்பப்படும்.

### கமிஷன்

நமது புதுமுறை சங்க வாசகங்களைப் பாடப் புத்தககமாக வைத்துக் கொள்ளும் மானேஜர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும் 100க்கு 20 சதவிகித கமிஷன் கொடுக்கப்படும்.

நமது "ஆரம்பக்கல்வி" மாதப் பத்ரிகையையும் இனமாக அனுப்பப்படும்.

ஆசிரியர்
**"ஆரம்பக் கல்வி"**
சென்னை—1.

# வீரத்தமிழர் சிதம்பரம் பிள்ளை

(புதுமுறை சங்க வாசகம் - ஐந்தாம் வகுப்பு)

18-ம் பாடம்

1. தமிழ் நாட்டில் பிறந்த தேசத் தலைவர்களுள் முதன்மை இடத்தில் வைத்து எண்ணத் தக்கவர், திருவாளர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்களே ஆவர். அவர் இறந்து ஆண்டுகள் பல ஆயினும், அவருடைய தியாகமும், தொண்டும், வீரமும் இன்றும் தமிழ் இளைஞர்களுக்கு ஊக்கம் தருவனவாய் இருக்கின்றன.

2. அவர் தமிழ் நாட்டில், தூத்துக்குடிக்கு அடுத்த ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில், வேளாளர் வகுப்பில் பிறந்தார்,

தமிழ்ப் புலமையும் ஆங்கிலக் கல்வியும் நிரம்பிய இவர், சட்டத்தில் தேர்ச்சி அடைந்து, தாம் பிறந்த ஊரிலேயே நியாயவாதியாக இருந்தார். தம்முடைய தொழில் முன்னேற்றத்திற்கு அவ்வூர் இடந்தராமையால், தூத்துக் குடிக்கே சென்று தம் திறமையினால், கீர்த்தி வாய்ந்த நியாயவாதியாக விளங்கினார்.

3. அறிவும் ஆற்றலும் உடைய ஒவ்வொருவரும் தம்முடைய முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதைவிட, தம் தாய் மொழியின் வளர்ச்சிக்காகவும், தாய் நாட்டின் பெருமைக்காகவும் மிகுதியாகப் பாடுபடவே விரும்புவர். அந்த விதிக்கு விலக்காகாத வீரர் சிதம்பரம் பிள்ளை' தம்முடைய உடல், பொருள், ஆவி, அனைத்தையும் தமிழுக்கும் தமிழர்க்கும் பல வகையிலும் அர்ப்பணம் செய்யத் துணிந்தார். ஆகையினால், அவர் தம்முடைய நியாயவாதத் தொழிலில் ஊக்கம் செலுத்துவதைக் குறைத்துக் கொண்டு, சமூக நலத்துக்காக உழைத்தார். அக்காலத்தில் தூத்துக்குடியில் ஐரோப்பியரால் நடத்தப்பட்டு வந்த நூல் நூற்கும் சாலைக்குப் போட்டியாகச் சில இந்திய நூல் நூற்கும் தொழிற்சாலைகளும், இவருடைய பெருமுயற்சியால் ஏற்பட்டன.

4. தூத்துக்குடி தென்னிந்தியாவில் உள்ள துறைமுகப் பட்டினங்களில் ஒன்று. ஆதலின், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நடந்து வந்த ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்கள் தூத்துக்குடியின் மார்க்கமாகவே நடைபெற்று வந்தன. அத்தகைய வியாபாரத்திற்கு இன்றியமையாமல் வேண்டப்பட்ட கப்பல்கள் ஐரோப்பிய வியாபார ஸ்தலங்களின் உடைமையாக இருந்தன. ஆதலின், அவ் வாணிகத்தால் ஏற்பட்ட இலாபம் ஐரோப்பியருக்கே கிடைத்தது. அதனை நன்கறிந்த சிதம்பரம் பிள்ளை அவர்கள் இந்தியர்களுடைய மூலதனத்தால், இந்தியத் தொழிலாளர்களினால், நடத்தக்கூடிய கப்பல் போக்கு வரவு ஸ்தாபனம் ஒன்றை உடனே ஏற்படுத்தவேண்டும் என்று கருதினார். கருத்துக்கும் செயலுக்கும் இடையே காலம் கடத்தாத துரிதமான மனப்போக்குடைய அவர், அத்தகைய வியாபார ஸ்தாபனத்தைத் தாமே உண்டாக்கவேண்டுமென்று முனைந்தார்.

5. எடுத்துக் கொண்ட அரிய தொண்டை ஆற்றும் முனைப்புடன் இருந்த அவர் தம் மனைவி மக்களையும் மறந்தார். அவருடைய மனையாட்டிக்கு ஏற்பட்ட வியாதியினையும், அவருடைய மைந்தருக்கு நேர்ந்த நோயினையும், சற்றும் பொருட்படுத்தாமல், அவர் பம்பாய் முதலிய இடங்களுக்குச் சென்று

கப்பல் வாணிகச் சங்கத்திற்கு வேண்டிய மூலதனத்தைப் பலரிடமிருந்து பங்குகளாகச் சேமிக்கத் தொடங்கினர். எந்த வேலையையும் உறுதியான மனத்தோடு, தக்க முறைகளில் செய்தால், பயன் உறுதியாகக் கிடைக்கும் என்பது பெரியோர் கண்டறிந்த உண்மை. எனவே திண்மையான மனமும் நுட்பமான புத்தியும் உடைய பிள்ளையவர்களின் இடைவிடா முயற்சியினால், "இந்தியன் நாவிகேஷன் கம்பெனி" என்ற கப்பல் வாணிகச் சங்கம் நிறுவப்பட்டது. அதன் பெயரால் வாங்கப்பட்ட இரண்டு கப்பல்களோடு சிதம்பரம் பிள்ளை அவர்கள் பம்பாயில் இருந்து புறப்பட்டுத் தூத்துக்குடி போய்ச் சேர்ந்தார்.

7. உற்ற உறவினரான மனைவி மக்களின் நலத்தையும் பொருளாக மதியாமல், கொண்ட வினையின் மீதே மனத்தைச் செலுத்தி, தியாகம் செய்த இவரைத் தமிழ்நாடு எந்நாளும் மறத்தல் கூடாது. பிள்ளையவர்கள் இதனோடு நில்லாமல், திருநெல்வேலியில் 'தேசாபிமான சங்கம்' என்னும் கழகத்தை நிறுவி, அதன் வளர்ச்சிக்காகப் பிரசங்கங்கள் பல செய்து, தமிழர்களுடைய மனப்பான்மையை நல்ல முறையில் வளர்த்தார். தூத்துக்குடியில் ஐரோப்பியரால் நடத்தப்பட்ட பஞ்சாலையின் உழைப்பாளரின் கூலி மிகவும் குறைந்த அளவாக இருந்தமையின், அவர்கட்குத் தக்க கூலி தருமாறு ஆலை முதலாளிகளிடம் மன்றாடிக் கேட்டார். அவர்கள் இவர் வேண்டுகோளுக்கு இசையாதபோது, வேலை நிறுத்தம் என்னும் உபாயத்தைக் கையாண்டார். வேலை நிறுத்த காரணத்தால், தொழிலாளருக்கு ஏற்பட்ட சங்கடங்களை எல்லாம் பலரிடம் இருந்து பெற்ற நன்கொடையினால் நீக்கினர்.

7. ஒருவனுக்கு உயர்வும் தாழ்வும் கலந்தே வரும் என்பது உண்மையன்றோ? பிள்ளையவர்களின் வாழ்க்கையில் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு துன்பம் ஏற்பட்டது. அவர் அரசாங்கத்தாரால் குற்றம் சாற்றப்பட்டு இருபது ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். அத்தண்டனை, பிறகு மேல் நீதிமன்றத்தாரால், ஏழு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. சிறையில் இருந்த காலத்தில் சிதம்பரம் பிள்ளையவர்கள் தமிழ்நூல் ஆராய்ச்சியை மேற்கொண்டார்கள். சிறையிலிருந்து வந்தவுடன், அவர் சில புது நூல்களை இயற்றியும், பழைய நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டார்.

8. உடல், உழைப்புக்கு இடம் தந்த வரையில் சிறப்பாகத் தமிழர்க்கும், பொதுவாக இந்தியர்க்கும், பல துறைகளிலும் உழைத்த இப்பெரியார் சிறையிலிருந்து வந்த பிறகு, சில காலம் அமைதியாக நியாயவாதி அலுவலை மேற்கொண்டிருந்து பின்னர் 1936-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார்.

# புதுமுறை சங்க வாசகங்கள் கிடைக்குமிடம்

### சென்னை

1. ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சைனா பஜார் ரோட், சென்னை.
2. எம். துரைசாமி முதலியார் அண்டு கம்பெனி, நெ. 1, மலையப் பெருமாள் தெரு, சென்னை.

### வட ஆற்காடு

1. கே. வி. பிரஸ், புத்தக வியாபாரிகள். வேலூர்.

### தென் ஆற்காடு

1. எஸ். விஸ்வநாதம் பிள்ளை, புத்தக வியாபாரிகள், விழுப்புரம்.
2. ராமாநுஜம் செட்டி அண்டு சன்ஸ், புத்தக வியாபாரிகள், சிதம்பரம்.
3. பி. எஸ். ராஜன் அண்டு கம்பெனி, பன்ருட்டி.

### தஞ்சாவூர்

1. பாரத மாதா புக் டிபோ, கருந்தட்டாங்குடி. தஞ்சாவூர்.
2. பிரகாஷ் டிரேடர்ஸ், திருவாரூர்.
3. என். வி. நாதன் அண்டு கோ, கும்பக்கோணம்.

### திருச்சி

1. பழனியப்பா பிரதர்ஸ், தெப்பக்குளம், முருகன் அண்டு கம்பெனி, திருச்சி.

### ராமநாதபுரம்

கே. எஸ். பிள்ளை அண்டு சன்ஸ், இராஜா பாளையம்.

### மதுரை

1. எஸ். எஸ். இராஜன், புத்தக வியாபாரி. புதுமண்டபம், மதுரை.
2. கே. வி. நாராயணஅய்யர், அண்டு சன்ஸ், திண்டுக்கல்.

### சேலம்

1. ஏ. கே. சந்திரய்ய செட்டி, குகை, சேலம்.

### கோயமுத்தூர்

1. கே. வோ. பெட்டை கௌடர், ராஜா தெரு கோவை.
2. ஸி. ஆர். நடராஜன் அண்டு ஸன்ஸ், கோவை.

### திருநெல்வேலி

1. பிரபாத் பப்ளிஷர்ஸ், திருநெல்வேலி ஜங்ஷன். டயோஸிஸன் புக்டிபோ பாளையக் கோட்டை,

**இன்னும் எல்லா புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.**

# ஸாக்ரடீஸும் - இளைஞனும்

(சோ. தீனதயாளன் பி. ஏ; பி. டி.)

கிளாக்கன் அரிஸ்டனின் மகன் இன்னும் இருபது ஆண்டுகள் நிறையப் பெற்றவனல்ல. ஆனால் ஆதன்ஸ் நாட்டுமக்கள் முன்னிலையில் சொற் பெருக்காற்ற விரும்பி பிடிவாதம் செய்தான். அந் நாட்டின் ஆட்சிக் குழுவில் முக்கியதொரு பதவி பெற வேண்டியே அவன் சொற்பொழிவு நிகழ்த்த இருந்தான். அவனது நண்பர்கள், உற்றார் உறவினர்கள் முயன்றனர், அவனைத் தடுக்க முடியவில்லை. மேடையிலிருந்து கீழே முரட்டுத் தனமாய் இழுத்து விட வேண்டியதாயிற்று. அங்கு குழுமி இருந்த மக்கள் யாவரும் நகைத்தனர். அவனைப் பார்த்து அவன் பித்தம் தெளிய அவனை ஸாக்ரடீஸிடம் அழைத்துச் சென்றனர். அப்பெரியாரும் அவனுடன் பேசினார். பேசியே, பதவி நாடிய அவன் பெரும் விருப்ப முயற்சியைத் தடுத்தார்.

ஸாக்ரடீஸ் :- "ஆகவே, கிளாக்கன், நாட்டின் ஆட்சியில் முக்கிய பங்கை எடுத்துக் கொள்ள நினைக்கிறாய்."

கிளாக்கன் :- "ஆம் நான் விரும்புவது அப்படித் தான்."

ஸா :—"இது மெய், மனிதன் அடையக் கூடிய பெரும் பதவி பேறுகளில்" இது ஒன்று. இப்பதவியை அடைந்தால் நினைத்ததைச் செய்யலாம். உன் நண்பர்களுக்கு உதவலாம். உன் குடும்பத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரலாம். உன் நாட்டின் நலத்தையும், பலத்தையும் அதிகப்படுத்தலாம். அதனால் நீயும் ஆதன்ஸில் மிகப் புகழ் பெறுவாய். ஏன், கிரேக்க நாடுகள் முழுவதும் உன் புகழ் பரவும், அயல் நாடுகளிலும் கூட. அந்நாட்டினர் உன்னைக் காண நேர்ந்தால் மிக்க வியப்புடன் உன்னைப் பார்ப்பார்கள்".

இந்த முறையில் ஸாக்ரடீஸ் பேசவே இளைஞன் அவர், பேச்சை சுவைத்தான். அவருடன் பேச அங்கேயே நின்றும் விட்டான். மேலும் அப்பெரியார் பேசலானார்.

"இது மெய்யே, நகரம் உன்னை இதுபோன்று பெருமைப்படுத்த வேண்டுமாயின் இந்நகரத்தின் நலன்களை நீ வளமைப் படுத்த வேண்டியிருக்குமே".

இளா:—மெய்தான்.

ஸா:—"நல்லது. நீ உள்ளத்தைத் திறந்து பேச வேண்டும். நாங்களும் நீ எண்ணுவதை அறிய வழியிருக்கும். இம்முறையில் நீ எந்த நலத்தை முதன் முதலில் கவனிப்பாய்?" இந்த நிலையில் இளைஞன் என்ன கூறுவது என்று அறியாது தயங்கினான். இதைப்பற்றி அவன் இன்னும் நினைக்கவே இல்லையே. அப்பொழுது தான் எந்த இடத்திலிருந்து சீர்திருத்தத்தைத் தொடங்குவது என்பதைப் பற்றி ஆராயத் தொடங்கினான்.

(அப்பொழுது)

ஸா:—"நீ உனது நண்பன் ஒருவனின் குடும்பத்திற்கு நன்மை செய்ய வேண்டி இருந்தால், முதலில் நீ அவன் குடும்பத்தின் செல்வ நிலையைஎப்படி உயர்த்துவது என்பதைத் தானே நினைப்பாய்? அதுபோலவே முதலில் இந்நகரத்தின் செல்வ நிலையை மேன் மேலும் உயர்த்த விரும்புவாய். பிறகு நகரத்தின் வருவாயை அதிகப் படுத்துவாய்.

கிளா:—அநேகமாக அப்படித் தான்.

ஸா:—நல்லது, சொல் பார்க்கலாம், இந்நகரத்தின் வருவாயின் வழிகளை, இதைப் பற்றி முன்னமே சிந்தித்திருப்பாய் என்று எண்ணுகிறேன். பிறகு தானே அந்தந் துறைகளை நல்ல வகையில் பயன் படுத்த முடியும். குறைந்த வருவாயுள்ளவற்றை விரிவு படுத்தவோ அல்லது அதற்கு பதிலாக வேறு புதுவழிகளைக் காணவோ முடியும்.

கிளா:—உண்மையைச்சொல்ல வேண்டின் இதில் இன்னும் நான் கவனம் செலுத்தவில்லை.

ஸாக்:—நல்லது அது போகட்டும், நகரத்தின் செலவினங்களைக் குறைப்பதிலோ அல்லது சிலவற்றை முழுவதும் ஒழிப்பதிலோ உன் நாட்டம் இருக்கிறதல்லவா?

கிளா:—இத்துறையிலும் நான் சிறிதும கவனம் செலுத்தவில்லையே.

ஸா:—நல்லது, பின் இந்த விஷயத்தையும் தள்ளிப் போட வேண்டியது தான். வருவாய் செலவு ஆகிய இவற்றைப் பற்றி அறியாது நகரத்தை செல்வ மிக்கதாக ஆக்குவது இயலாது அல்லவா?

இவ்வாறே பேசிக் கொண்டும இடை இடையே கேள்விகள் கேட்டுக் கொண்டும் செல்லும் பொழுது, நிர்வாகப் பதவிக்குத் தனக்குத் தகுதி உண்டா என்பதைப் பற்றி அவனுக்கே ஐயம் உண்டாயிற்று. எனினும் அவன் எளிதில் தன்

விருப்பத்தை விட்டு கொடுப்பவனல்ல. விடாது மேலும்,

கிளா:—ஆனால், ஸாக்ரிடீஸாரே, நகரத்தின் செல்வநிலையை உயர்த்த வேறொரு வழியும் உண்டே. நமது பகைவரின் செல்வத்தைக் கொள்ளை அடித்துக் கொண்டு வரலாம்.

ஸாக்:—நீ கூறுவதில் எள்ளளவும் ஐயமில்லை. அம்முறையும் பின்பற்றலாம். நீ அவர்களைவிட பலவானாக இருக்க வேண்டுமே. அவ்வாறு இல்லாவிடில் மற்றவர்களுடன் போர் செய்ய முற்பட்டு, இருக்கும் செல்வத்தையும் அவர்களுக்குப் பறிகொடுக்க வேண்டியதானாலும் ஆகுமே.

கிளா:—அதுவும் மெய்தான்

ஸாக்:—நல்லது, இத்தவறை நீக்குவது எப்படி. இதற்கு நம்மவர் பலமும், எதிரியின் பலமும் எவ்வளவு, என்பதை அறிய வேண்டும். தயவு செய்து சொல்லு. நமது கலாட்படை எவ்வளவு, கப்பற்படை எவ்வளவு பின்னர் கூறு எதிரியின் படைகளைப் பற்றி நீ அறிந்ததை.

கிளா:—எப்படி அய்யா சொல்வது திடீரென குறிப்புகள் வேண்டுமே.

ஸாக்:—நல்லது, இந்தப் பொருள் பற்றி குறிப்பு ஏதேனும் எடுத்திருப்பாயே. தயவு செய்து அதைக கொண்டுவா பார்க்கலாம். நான் அதை அறிய ஆவலாயுள்ளேன்.

கிளாக்:—குறிப்பு ஒன்றும் என்னிடம் இல்லை. இது உண்மை. இதுபற்றி குறிப்பே எடுக்கவில்லை.

ஸாக்:—ஆகவே, செல்வம் பெருக போர் தொடங்குவது அறிவுடமையல்ல. மேலும் உனது நிர்வாக ஆட்சியின் தொடக்கத்தில், சிக்கலான, கவலையுடன், கவனிக்க வேண்டிய (இவ்விதப் போரை) நிறுத்திவைக்கவே விரும்புவாய் என்று எண்ணுகிறேன். நமது கோட்டைகள், எல்லைப்புறக் காவல் ஆகியவற்றின் தற்போதைய நிலை என்ன? தெரிந்ததைக் கூறு. எப்படி அவற்றைச் சீர்திருத்துவது? பலப்படுத்துவது? சிலவற்றை ஒழித்துவிட்டு செலவைக் குறைக்க முடியுமா, பார்க்கலாம்.

இவ்வாறு ஸாக்ரிடீஸ் கேட்க, இளைஞன் ஊரில் அதிகமாக நிலவிவரும் ஒரு கருத்தைக் கூறுகிறான். அதன்படி,

கிளா:—நான் உடனே எல்லாவற்றையும் முதலில் ஒழித்துக் கட்டுவேன். அவை சரிவர நாட்டைக காப்பதேயில்லை. உற்பத்திப் பொருள் யாவும் திருடு போகின்றன.

இதைக் கேட்டதும் அப்பெரியார், கோட்டைகளை ஒழிப்பது விரும்பிய பலனைத் தராது என்பதை எடுத்துக் காட்டிய பின், தானே நேரில் சென்று காவல் சரிவர நடைபெற வில்லை என்பதை அறிந்தானு என்று அவனைக் கேட்டார்.

கிளா:—இல்லை, நான் யூகிக்கிறேன்.

ஸாக்:— இவ்விஷயத்தையும் நாம் ஒத்திப் போட வேண்டியதே. யூகிப்பதை விட உண்மை என்ன என்பதை அறிந்த பின்னர்தான் இக்காரியத்தில் இறங்குவது நல்லது.

கிளாக்கன் அதை நல்வழி என்று ஏற்றுக் கொண்டான். இதே முறையில் தொடர்ந்து ஸாக்ரடீஸ் பேச ஆரம்பித்தார். வெள்ளிச் சுரங்கங்களினின்றும் ஆதன்ஸ் நகரம் பெறும் வருமானத்தையும், அவ்வருமானம் குறைந்ததற்கான காரணங்களையும் விளக்கினார். நகரத்தின் உணவிற்காக இறக்குமதியாகும் தானியங்களின் அளவைப்பற்றியும் விளக்கிக் கூறினார். இவையாவற்றையும் கேட்டதும், இத்தகைய விஷயங்கள் கட்டுக்கடங்காத அளவினதாக உள்ளன என்பதை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

ஸாக்ரடீஸ் இதோடு அவனை விட வில்லை. இது போன்ற விஷயங்களை அறியாதபடி, கவனியாதபடி, ஒரு குடும்பத்தையே ஒருவராலும் நடத்த முடியாது என்பதை எடுத்துக் காண்பித்தார். பத்தாயிரக் கணக்கான குடும்பங்களுக்கு ஏற்பாடு செய்வது மிக மிக கடினம் என்றும், ஆகவே முதன் முதலில் ஒரு குடும்பத்தை நடத்தத் தெரிய தொடங்குவதே நன்றெனவும் கூறினார். அதன் பொருட்டு கிளாக்கன் தன் மாமன் குடும்ப நிர்வாகத்தில் பங்கு கொள்ளும்படி அவனுக்குக் கூறினார். அவன் மாமனும் பிறர் உதவியை அந்த சமயத்தில் நாடி இருந்ததும் எடுத்துக் காட்டப்பட்டது.

இதைக் கேட்டதும் சட்டென கிளாக்கன் "ஆம் அது உண்மையே, என் மாமன் குடும்பத்தை நிர்வகிப்பேன். ஆனால் அவர் என்னை அதற்கு நம்பி விட மாட்டாரே.

இந்த இடத்தில் ஸாகரிட்டீஸுக்கு நல்ல பிடிகிடைத்தது. உடனே அழுந்தத் திருந்தமாக "ஆகவே உன் மாமன் உன்னை அவர் குடும்பத்தை நிர்வகிக்க விடும்படி கூறி அவரை உன்வழி திருப்ப முடியவில்லை என்றும் ஏதன்ஸ் நகர மக்கள் யாவரையும் அவர்களுக்காக நாட்டை நிர்வகிக்க உன்னைத் தேர்ந்தெடுக்கும்படி கூறி அவர்கள் மனதைத் திருப்ப முடியும் என்று எண்ணினையே" என்று கூறினார். (48-ம் பக்கம் பார்க்க)

# மே தினம்

பட்டப் பகல் — பிணமாகத் தொங்கினர் நால்வர், தூக்கு மேடையில்! துடித்துத் துவண்டு தம் உடலை ஆட்டுவித்த 'உயிர் மூச்சை'க் காற்றில் கலக்க விட்டு விட்டு, சோர்ந்து தொங்கின நான்கு உடல்கள்!

கூடகோபுரங்கள் மாட மாளிகைகள் நிறைந்த சிகாகோ நகரிலே நடந்த இச்சம்பவம்—உலகத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது! உலகம் முழுதும் இச்சம்பவம் கண்டு வேதனைப் பட்ட அந்த நேரத்தில் வீணை மீட்டின, அமெரிக்க அரசாங்கமும் அங்குள்ள முதலாளித்து வமும்!

அவர்கள் திருடர்களல்ல, கொலைகாரர்களல்ல, கொடுஞ் செயல் எதுவும் செய்யவில்லை—எனினும் தூக்கு மேடையில் தொங்கினர், பிணமாக! உடல் துடிக்கத் தொங்கி உயிரை இழந்தனர்!

1887 நவம்பர் 11-ந் தேதி உலக வரலாற்றில் ஒரு ஏட்டை இரத்த மயமாக்கியது-உழைப்போர் இதயத்தில் உணர்ச்சியையும், 'உழைக்கிறாய், உத்தமா, மாடுபோல! ஆனால், உழைப்பின் பயன் என்ன! சாவு! அதோ, பார் உங்களிலே நால்வர் பிணமாகத் தொங்குகின்றனர்! உங்களிலே அவர்களும் நால்வர் — அவர்களுக்குத் தூக்கு. பார், பயப்படாமல் பார்! அவர்களுக்குத் தூக்கு!' என்ற ஆத்திரமயமான வீர நினைவுகளைத் தூண்டிவிட்டது.

"15 மணி நேர வேலை! 12 மணி நேரம் இயந்திரத்துக்கடியிலே! முடியாது, நாங்களும் மனிதர்கள்தான்!" இந்த வீர முழக்கம் அமெரிக்காவிலே எழும்பியது. "எட்டு மணி நேரம்தான் வேலை செய்வோம்!" என்ற இக்கிளர்ச்சி 1878-ல் அமெரிக்காவில் துவங்கியது, முதல் முறையாக. அன்று முதல், அடிக்கடி இக் கோரிக்கை, பாட்டாளிகள் கூடும்போதெல்லாம் எதிரொலித்தது

ஒவ்வொரு ஆண்டும், தொழிலாளர்கள் இக்கோரிக்கையை வலியுறுத்தினர்.

பாட்டாளிகளின் உரிமை முழக்கம் கண்ட 'பணம் பெருத்தான்கள்' கேலிபேசினர்—கொக்கரிப்புக்கண்டு எக்களித்தனர்! விளைவு—புயல் வீசியது ஒரு நாள்! பல்லாயிரக் கணக்கான பாட்டாளி மக்கள் சிகாகோ நகரில் கூடி முழக்கமிட்டனர், 'எட்டு மணி நேரமே வேலை செய்வோம்' என்பதாக! ஆர்ப்பாட்டங்கள்,

பொதுக்கூட்டங்கள் நாடெங்கும் நிகழ்ந்தன. சிகாகோ நகர் அமெரிக்கத் தொழிலாளர்களின் வெற்றி நிலையமாகத் திகழ்ந்தது.

**1886 மே மாதம் முதல் நாள்**—சிகாகோ நகரில் இடியோசையெனத் தொழிலாளர் முழக்கம் எதிரொலித்தது. ஊர்வலம், ஆர்ப்பாட்டம், வெற்றி முழக்கம் பெருமிதமாக அளவில் நடைபெற்றது.

தூங்கிக் கிடந்த புலியின் உறுமல் கண்ட முதலாளித்துவமும் அரசாங்கமும் பயந்தன! ஏழைகள்—எரிமலையாகி விட்டனர், என்பது கண்ட அவர்கள் நடுநடுங்கினர், ஆத்திர மடைந்தனர். எலிகளின் எக்காளம், இது! என்று கூறினர். சிங்கத்தின் குகையில் சுண்டெலிகளின் தொல்லையா? என்று கோபத்தோடு பேசினர். வேண்டாம் போய்விடுங்கள்—வேதனையை வரவழைக்காதீர்கள் என்று இதோபதேசம் செய்தனர்!

மிரட்டல் வார்த்தை, பயமுறுத்தல், இதோபதேசம்—எதுவும் பலிக்கவில்லை! "எட்டு மணிநேரம் வேலை கொடு!" என்று லட்சோப லட்சம் பாட்டாளிகளின் இதயகீதம் எங்கும் எதிரொலித்தது! ஆதிக்கபுரி சிறிது அசைந்தது—விஷயம் விபரீதமாகிவிடுமோ என்று அஞ்சியது. சிறிது நேரம் யோசனை. போலீசுக்கு உத்தரவு!

துப்பாக்கிகள் முழங்கின—பாட்டாளிகளின் படை வரிசையிலே பிணங்கள்—நூற்றுக் கணக்கில் **'மே மாதம் முதல் நாள்'** இரத்தம்—சிகாகோவின் வீதிகளில் உறைந்து கிடந்தது ஓட வழியில்லாமல்!

சர்க்காரின் கொடுங்கோன்மை உழைப்பாளிகளின் பிணங்கள்—ஒதுங்கிக் கிடந்தோர் உள்ளத்தையும் கொந்தளிக்கச் செய்தது! 'உரிமை நமது, மூச்சு! உலுத்தர் தலை போச்சு!' என்று வீரப் பண்பாடிக் கொண்டு திரண்டனர்—வெற்றி முரசும் ஒலித்தனர்—சிகாகோ கண்டிராத மாபெரும் பொதுக் கூட்டம் சர்க்காரின் போக்கைக் கண்டிக்கக் கூடியது, மே மாதம் நான்காம் தேதி! பாட்டாளிகளின் வளர்ச்சி வளர்பிறை யாவதைக் கண்ட அரசாங்கம் கூட்டத்தைக் கலைக்கப் போலீஸ் படைகளை அணிவகுத்து அனுப்பியது!

---

46ம் பக்கம் தொடர்ச்சி

முடிவில் ஒரு பழமையான உண்மை வாசகத்தையும் கூறினார்.

"எண்ணத்திலோ அல்லது செய்கையிலோ, நமக்குத் தெரியாததில் தலையிடுதல் எப்பொழுதும் தீமையே" என்பதே அப்பழமொழி.

(சேலம் நகராண்மை உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர்)

# சிற்பியின் முடிவு!

(அருணன்)

[தாஜ்மஹால் பெறுவதற்கில்லை]

[தாஜ்மஹால் ஆக்ராவில் இருந்து உலகப் புகழைச் சம்பாதித்த ஓர் உயர்ந்த கட்டிடம். அது கட்டும் போது நடந்த ஒரு சிறுகதை தான் இது. ஆனால் இந்த வருந்தத் தக்க கதை சரித்திரத்தில் அதன் புகழுக்கிடையில் இடம் பெறுவதற்கில்லை.]

அன்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் நேரம் ஒருவாறு கழிய என் பெட்டியிலுள்ள புத்தகங்களைக் கலைத்துக் கொண்டு இருந்தேன். அப்போது திடீரென்று தாஜ் மஹாலை அட்டைப் படமாகத் தாங்கிய ஓர் அழகிய புத்தகம் கைக்குக் கிட்டியது. சற்று நேரம் உற்று நோக்கினேன்! என்ன! எவ்வளவு அழகான ஓர் உன்னத கட்டிடம். ஆகா! என்னே இதன் அமைப்பு. இதைச் சமைத்தவன் எவ்வளவு உயர்ந்தோனாக இருக்க வேண்டும் என்றவாறு பெருமூச்சு விட்டுக் கொண்டே சுவடியை விரித்தேன்.

முதல் பக்கத்தில் அக்கட்டிடம் கட்டுவதற்குக் காரணமாக இருந்த நூர் ஜஹானின் புன்னகை என்னைத் திகைக்கச் செய்தது. என்ன கம்பீரம்; சந்திரன் போன்ற முகம், செந்தாமரை தவழும் கன்னங்கள், கூரிய பார்வை, கருமை நிறைந்த கண்கள், பவளத்தையொத்த உதடு, பார்க்கத் தெவிட்டாத பார்வை! இவ்வாறு ரசித்துக் கொண்டிருக்கும்போது என் கண்களை யாரோ பின்னாலிருந்து கட்டுவது போல் இருந்தது.

„சூ! யாரது....... இவ்வளவு நல்ல படத்தைக் கண்ணுறும்போது கண் கட்டும் அசடு?''. என்று கோபமாகக் கையை எடுத்தேன்.

“என்ன மாமா! ஒரே அடியாக ரசிக்க ஆரம்பித்து விட்டீர்களே!'' என்று கொஞ்சும் குரலுடன் கேட்டாள் என் அத்தை மகள் கமலா.

ஒன்றுமில்லை கமலா!...... இதோ பார் இந்தப் படத்தை” என்று அவளிடம் சுட்டிக் காட்டினேன். பெண்களுக்குத் தங்களை விட ஒரு அழகி உண்டானால், வெறுப்புத்தான் வரும்.

“இதோபார் கமலா இந்த தாஜ்மஹாலைப்பற்றி உனக்கு என்ன தெரியும்! சொல்லு'' என்றேன்.

"என்ன தெரியும் இது ஒரு தாஜ்மஹால் படம் என்று தெரியும்" என்று கொஞ்சினாள். இதற்குள் அத்தை, அவளைக் கூப்பிட ஓடிவிட்டாள்.

படம்! படமா அது. பல வெளிநாட்டாரையும் வியக்கச் செய்யும் ஓர் அழகுக் களஞ்சியம். இப்படம் வரைந்த சித்திரக்காரன் எவ்வளவு சிரமப்பட்டிருப்பான். என் மனக்குதிரை பின்னோக்கிப் பறக்க ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் ஆக்ராவிற்கு எட்டிக் குதித்தது.

அரண்மனை!

அரசர் படுத்துக் கொண்டிருந்தார். அருகே நூர்ஜஹான் அமர்ந்திருந்தாள். எங்கும் நிசப்தம். ஆண்களை மயக்கும் அந்த அழகி அரண்மனையின் அணிகலன் என எண்ணி இருந்தான் ஷாஜஹான். தன் உடல், பொருள், ஆவியாவும் தன் ஆருயிர்க் காதலன் ஷாஜஹான்தான் என எண்ணி

---

(48-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திடீரென ஒரு வெடிகுண்டு!—அணிவகுத்து நின்ற போலீஸ் கூட்டத்திலே விழுந்தது..........ஆத்திரமடைந்த யாரோ 'அதிகாரப்புலி'களின் மீது குண்டு வீசிவிட்டனர்!

கூட்டம் கலைக்கப்பட்டது, கோபாவேசத்துடன், நாடெங்கும் கைதுகள் நிகழ்ந்தன. புலன் விசாரணை நடைபெற்றது. நால்வர், நீதி மன்றத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். தூக்கு மேடைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் — பிணமாகத் தொங்கவிடப்பட்டனர், 1887 நவம்பர் 11-ஆந்தேதி பகலில்!

சிகாகோ படுகொலை—அகில உலகையும் ஆட்டியது. உழைப்போர்களின் இதயங்கள் குலுங்கின—வேதனை தாங்காது!

1889 பாரீஸ் நகரில் சர்வதேச தொழிலாளர்களின் மாநாடு கூடியது. உழைப்போர் வாழ வழி வகைகள் காணக்கூடிய அம்மகாநாட்டில் 'சிகாகோ சம்பவம்' பற்றிப் பேசப்பட்டது. 'எட்டுமணிநேரம் வேலை' என்ற அடிப்படைக் கோரிக்கைக்காக, அமெரிக்க நகரின் வீதியை இரத்த மயமாக்கிய மே தினம் குறித்து ஆலோசித்தனர். அந்நாளை—உலகபாட்டாளி மக்களின் விழிப்பு நாள் என்று அறிவித்தனர்!

"உரிமைக் கோரிக்கையை உயிர் போயினும் விடோம்" என்பதைக் காட்ட ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் நாளையும் கொண்டாடவேண்டும் என்று முடிவு செய்தனர். அன்று முதல் 'மேதினம்—உழைப்போரின் உரிமைமுழக்கத் தினமாயிற்று!

யிருந்தாள் நூர். சிறிது நேரத்திற்குப்பின் மெள்ள நூர் ஜஹான் வாய் திறந்தாள்.

"அரசே......" பேச்சு முற்றுப் பெறவில்லை.

"என்ன நூர்.... ஏன் மௌனம்...."

"இல்லை, நான் ஒன்று கேட்கின்றேன் அதைக் கொடுக்க..."

"தடையே இல்லை! என்ன... கேள்?"

"அரசே, நாடு புகழும் நூர் ஜஹானை அடைந்தது உம் பாக்கியமே. அதை வேறொருவன் அடைய முடியாது. என் ஆசை உங்கள் உயிரல்லவா?"

"ஆம்... நூர். உன் உயிரும் என் உடலும் ஒன்றுபட்டதை ஒருபோதும் மறவேன். உன் விருப்பம் என்ன?"

நூர்ஜஹான் ஓர் உல்லாசக்காரி. அன்னிய நாட்டு அழகி கிளியோபாத்ராவை ஒத்திருந்தாள். அவள் அகிலம் ஆண்ட பல அரசர்களை அடிவருட அமைத்துக் கொண்ட அழகி; ஆனால், எந்த இளைஞனையும் ஏறெடுத்துப் பார்க்காத எக்களிப்பு இவளிடம் குடிகொண்டிருந்தது. தன் பிரிய காதலிக்குப் பெரிய ராஜ்ஜியத்தையே அர்ப்பணிக்க எண்ணினான்.

"ஏன் நூர்ஜஹான்...... என்ன யோசனை? மறைக்காது உன் விருப்பத்தைக்கூறு" என் ஏங்கி நின்றான் அவள் அலங்கார மொழிக்கு.

அரசனின் பூரண ஆதரவு, அவள் எண்ணத்தை வீறு பெறச் செய்தது, எழுந்தாள்; நிமிர்ந்து நின்றாள்.

"மன்னாதி மன்னவ! மணவாளனாகிய உம்மை மன்றாடுகிறேன். மறுக்காதீர்கள் கூற்றினை. மறக்காதீர் என் விருப்பினை, இதோ! இம்மொகலாய ஏகச் சக்ராதிபதியின் மனைவி என்ற முறையிலே கூறுகிறேன். நீர் நான் இறந்த பின் எந்தக் கட்டழகியையும் ஏறெடுத்துப் பார்க்கலாகாது. என் மனம் சாந்தியளிக்க அருள்வீர் சாமி. அடுத்தபடியாக நான் இறந்த பின் 'மொகலாய திலகமென இருந்தவள் நான்? என்று, சரித்திரமும் அவள் அன்பிற்காக ஷாஜஹான் கட்டிய கட்டிடம் என்றும் கூற நீங்கள் ஒப்புவீரா சாமி.

"கண்ணே! நூர்......உன் அன்பிற்காக நான் அதனைச் செய்யாவிடின் பெரிய பாவியாவேனே" என்று அவளை அணுகினான் அவள் கூந்தலை ஏந்திட்டான், பிறகு......

"நூர்ஜஹான் நீ இறந்த பின் நான் எந்த அழகியையும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. உன் சமாதிக்கு மேல் ஒரு கட்டிடம். ஆம்! உலகமே பார்த்து வியக்கும் படியான

உயர்ந்த அழகிய கட்டிடம் எழுப்புவேன். இது உண்மை. நம் பரம்பரை மீது ஆணை. உனக்காக அதைச் செய்வேன். எங்கே உன் மனம் களிப் பெய்தி விட்டதா?'' என அவள் முகத்தை ஏந்தினான்.

ஷாஜஹானின் அன்பிற்குப் பாத்திரமான நூர்ஜஹானின் மீது ஒரு கலைஞன் கண் வைத்திருந்தான். அநேக எண்ணங்களின் முடிவில் சமைத்த சிறு உருவம். அது அழகி நூர்ஜஹானின் சிலை. அவன் ஓர் சிற்பி. அவன் உள்ளத்தில் குடிகொண்டு விட்டாள் நூர்ஜஹான். ஆதலால் தன் கற்பனையெல்லாம் ஒன்று திரட்டி காதலி நூர்ஜஹானை ஓர் சிலையாகச் சமைத்தான். அச்சிலையைப் பார்த்துக் கொண்டே காலத்தைக் கழிப்பான். மனதைக் களிப்புக் கடலில் புரளவைப்பான். நூர்ஜஹானுக்கு இந்தச் சிற்பியைப் பற்றி அதிகமாகத் தெரியாது. இவன் கனவு மெருகு தட்ட ஆரம்பித்தது,—அச்சிலை உயிர் பெற முடிவானது.

''ஆம், கட்டழகி நூர்ஜஹான் தான் என் காதலி, என் வாழ்வில் அவள் இல்லையேல் நான் உயிர் வாழ முடியாது, உடனே இறப்பேன், அவளை நான் எப்படியும் அடைந்தே தீருவேன்'' எனக் கங்கணம் கட்டிக் கொண்டான்.

அவளைத் தினமும் பார்க்க வருவது வழக்கம். மாலையில் நூர்ஜஹான் தன் கூந்தலை அவிழ்த்துக் கொண்டு, தன் கையில் கோதிக் கொண்டு அந்தப்புர சாளரத்தில் உலாவுவாள். ஊருக்கு வெளியே ஒரு பரந்த வெளி. சிற்பி அங்கு சென்று ஒரு மரத்தின் மீதேறி பார்ப்பானாகில் அவள் உருவம் சற்று மின்னல் போல் தோற்ற மளிக்கும். திடீரென்று அவ்வுருவம் மறைந்து மறைந்து வெளிப்படும். இந்தக் காட்சியால் சிற்பி மனம் களித்திருந்தான். அன்று ஒரு நாள் ஊரே துக்கத்தில் மூழ்கி இருந்தது. சிற்பியின் முகத்தில் துக்கம் தாண்டவ மாடியது. அன்று தான் அரசரின் அழகி நூர்ஜஹான் நோய் வாய்ப் பட்டிருந்தாள். சிற்பி நூர்ஜஹானைப் பார்ப்பதற்கில்லை என்று விசனப்பட்டான்.

அவன் கட்டுப் படுத்தப் பட்ட மனதின் பொறுப்பை சமாளிக்க வேண்டியவனாயினான். அச்சிலையின் மெருகு குலைந்தது. அதனால் சிற்பி அச்சிலைக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருந்தான்.

அரண்மனையில் எங்கும் அழுகைக் குரல். அரசர் அந்தப் புரத்தில் உள்ளார். கொஞ்ச நாளாக சபை கூடுவதில்லை. மக்கள் மனத்துயர மெய்தினர். அரண்மனை வைத்

தியர்கள் தங்களுக்குத் தெரிந்த மருத்துவங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். நூர்ஜஹான் கண் மூடிக்கிடந்தாள். அரசர் அவளருகே அமர்ந்திருந்தார். அவள் கையை அரசன் கைகள் பிடித்துக் கொண்டிருந்தன. சிறிது நேரத்திற்குப் பின் நூர்ஜஹானின் கண்கள் விழிப்படைந்தன. கண்களில் இரு சொட்டு நீர் உதிர்ந்தது. அரசன் மனம் நிலை தடுமாறி நின்றது. அவர் கைகள் அந்த அழகியின் முகத்தைத் தடவின. தலைகொதிப்பேறி இருந்தது.

"நூர்ஜஹான், என் கண்ணே என்ன வேண்டும்?" என்றார் கண்களில் கலங்கிய நீருடன்.

நூர்ஜஹான் கைகளை உயர்த்தித்தன் காதலனின்கண்களிலிருந்து வரும் கண்ணீரைத்துடைத்தாள். அவள் கண்களில் நீர் முத்து முத்தாகத் தேங்கியது,

"அரசே! அன்றொரு நாள் செய்த சபதத்தை மறக்காதீர் ...எங்கே... உங்கள் முகத்தைக் கடைசியாக... களிப்புடன் காண ஆசைப்படுகிறேன்... காதலா, அதைச் செய்து முடியுங்கள். நீர் கண்டிப்பாக முடிப்பீரா?" என்றாள்.

பதில் வருவதற்குள் கண்கள் மூடிவிட்டன. மொகலாய ஏகாதிபத்தியச் சக்கரவர்த்தி ஷாஜஹானின் மனம் துக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

எங்கும் நிசப்தம். மணி மாலை ஆறு இருக்கும். சிற்பி தன் குடிலில் ஓர் மூலையில் ஒரு பாயில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் தலையின் மயிர்கள் நூர்ஜஹானின் சிலையின் காலில் மோதுண்டு கிடந்தன. யாரோ கதவைத் தட்டும் சப்தம். கதவு திறக்கப்பட்டது. ஆம் இரு அரசாங்க ஆட்கள் அவன் முன்னே வந்து நின்றிருந்தனர். வந்தவர்கள்:

"ஐயா, எங்கள் அரசர் கூப்பிடுகின்றார்" என்று கட்டளை இட்டனர்.

தான் கருதிய காதலின் அன்பைப் பெற வழியில்லை. என எண்ணி ஏங்கிக் கிடந்த அந்தச் சிற்பிக்கு ஓர் நற்செயதி அவன் மனதைத் திடப்படுத்தியது. அவன் சமாதிமேல், தான் ஒரு மாளிகை கட்டுவதாக ஒப்புக் கொண்டான். பெரிய மாளிகை, உலகிலேயே இதுவரை புனையாத அழகு பொருந்தியிருக்க வேண்டும். ஆம், தன் வலிமை, கற்பனையெல்லாம் ஒன்று திரட்டிக் காண்போர் கண்களைக் களிப்பெய்தும்படி செய்யும் ஓர் கட்டிடம், என எண்ணினான்.

"ஏ! கலைஞனே! உன் திறமை பூராவும் சித்தரிக்கப் பட்ட ஒரு சிருங்கார மாளிகை

யாக இருத்தல் வேண்டும். இதைச் செய்து முடிப்பாயாஞல் உனக்கு வேண்டிய அளவு பொன் தருவதாக என் எண்ணம்... செய்து முடிப்பாயா?

"அரசே! என் வல்லமையில் எழும் இக்கட்டிடம் எவ்வாறு அமைய வேண்டுமென்று கேட்கின்றீர்கள். நான் முடித்தவுடன் நீரே மெச்சி தக்க பரிசு தருவீர்கள்" என எக்களித்திருந்தான்.

கலைஞனின் கருத்தில் மேம்பட்டவள் நூர்ஜஹான். அவன் கற்பனையில் புகுந்தாள்; சிற்பத்தில் செழித்தோங்கினுள். அவன்மனத்தில் இடம் பெற்ற அந்த கட்டழகிக்காக அழகிய கட்டிடத்தை ஆக்கினுன் சிற்பி.

மாளிகை சலவைக்கற்களால் செய்யப் பட்டது. மனத்திற்காகச் செய்யப்பட்டதனுல் பணத்திற்காகச் செய்வதினும் பகட்டாக இருந்தது.

அரசன் களிப்பெய்தினுன். பெருமை கொண்டான். மனம் மிகவும் நிம்மதியுற்றிருந்தது.

ஒரு நாள் சபை கூடிற்று, மக்கள் சிற்பியை மனமார வாழ்த்தினர்.

"பரிசு......?"

உலகம் புகழும் அழகிய தாஜ்மஹாலை உண்டாக்கக் காரணமாக இருந்த அச்சிற்பியின் கண்கள், அதே போன்றுவேறு கட்டிடத்தைக் கட்டாதிருக்கும் பொருட்டு **தோண்டப்பட்டன!**

"என்ன மாமா! அதையே பார்த்து உருக்குலைந்து போய் விடாதீர்கள்" என்று செல்லமாகக் கன்னத்தைத் தட்டிஞள் கமலா.

"ஆமாம், கமலா இந்த சோகம் திகழும் தாஜ்மஹால் இன்று எவ்வளவு மகிழ்ச்சி தருகிறது பார்த்தாயா!" என்று அவளைத் தூக்கி நாற்காலியில் உட்கார வைத்தேன்.

---

(56-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதலின் முழுப்பொறுப்பையும் பணம் செலவு செய்வதில் அரசாங்கமே, முன் வர வேண்டுமே யொழிய, பாடசாலை நிர்வாகிகளைக்கைவிட்டுச் செலவு செய்யும்படி வற்புறுத்துவதும், எதிர் பார்ப்பதும் ஆட்சியாளரின் அறிவுடைய செயலாகாது.

சம்பளம் வசூலாகும் பாடசாலைகளுக்கு 15 சதவிகிதமும், வசூலாகாத பாடசாலைகளுக்கு 25 சதவிகிதமும் நிரந்தரமான நிர்வாக கிராண்டு கொடுக்க உத்தரவிடும்படி, அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

# எட்டாவது வகுப்புப் பரீட்சை

இவ்வருடம் 8-வது வகுப்பு மாணவர்களுக்கு, அரசாங்கப் பரீட்சையில் கொடுத்த கணக்குக் கேள்வித்தாள்கள், பிள்ளைகளுக்குத் தெளிவாகப் புரியாத முறையில், இரண்டு, மூன்று கணக்குகள் கொடுக்கப்பட்டதாகப் பல புகார்கள் வந்திருக்கின்றன. அவைகளில் சிலவற்றை நமது பத்திரிகையில் பிரசுரித்துள்ளோம். இதைப் பற்றி சில முக்கியஸ்தர்களை விசாரித்ததில் கணக்குக் கேள்வித்தாள்கள் ஆங்கிலத்தில் சரியான முறையில் தயாரிக்கப்பட்டன என்றும், ஆனால் அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்த போது சரியான முறையில் மொழி பெயர்க்கப்படவில்லை என்றும் தெரிகிறது. ஏற்பட்ட தவறு சரியாக மொழி பெயர்க்கப்படாததினாலாகும். ஆனாலும், இந்த இரண்டு கணக்குகளையும் தள்ளிவிட்டு மற்றும் உள்ள கணக்குகளுக்கு இந்த மார்க்குகளைப் பகிர்ந்து கொடுக்கும்படி ஏற்பாடு செய்ததாகத் தெரிகிறது. தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம் முதலிய திராவிட மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட கேள்வித்தாள்கள் அனுப்பும் சென்டர்களுக்கு மொழிபெயர்ப்புத்தாளுடன், ஆங்கிலக் கேள்வித்தாள் ஒன்றையும் சேர்த்து அனுப்பி வைத்திருந்தால் இத்தகைய தகராறுகள் ஏற்பட்டிருக்காது. கேள்வித்தாளில் சந்தேகப்படும் பிள்ளைகள் கேள்விகள் கேட்டால், அந்தந்த சென்டர்களின் பார்வையாளர்கள் சுலபமாகப் பிள்ளைகளுக்கு விளக்கி விடலாம். இத்தகைய முறையை அடுத்த ஆண்டிலிருந்தாவது பரீட்சை அதிகாரிகள் கடைப்பிடிப்பார்களென்று நம்புகின்றோம்.

# நிச்சயமில்லா நிர்வாகக் கிராண்டு

ஐந்து உபாத்தியாயர்கள் கொண்ட ஒரு பள்ளியை எடுத்துக்கொள்வோம். அதில் வேலை செய்யும் 5 ஆசிரியர்களும் ஹயர் கிரேடு ஆசிரியர்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம் அவர்கள் சார்பில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் மாதம் 25 ரூபாய் கிராண்டு வீதம், அப்பாடசாலை மானேஜருக்குக் கிடைப்பது ரூ.1500. அப்பாடசாலையில் பிள்ளைகளுக்குச் சம்பளமும் வசூலிப்பது கிடையாது: 15 சதவிகிதம் நிச்சயமாக கல்வி அதிகாரிகள் நிர்வாகக் கிராண்டு கொடுப்பார்களானால் அப்பாடசாலைகளுக்கு ரூ. 225 தான் கிடைக்கும். ஆனால், கல்வி மந்திரி மானேஜரைப் பிரதி ஆசிரியருக்கும் மாதம் ரூ. 5, உயர்த்திக்கொடுக்கும்படி கட்டளையிடுகிறார். அதாவது அப்பாடசாலை மானே

ஜரை வருடத்தில் ரூ. 300 கொடுக்கச் சொல்லுகிறார். இதில் ரூ. 75 துண்டு விழுகிறது. இனி பாடசாலைக் கட்டடத்திற்கு வாடகை, பாடசாலையைச் சுத்தம் செய்ய பிள்ளைகளை கொண்டுவர வேலையாட்கள் சம்பளம் மற்ற தட்டுமுட்டு சாமான்கள் வாங்க, மற்ற நிர்வாகச் செலவு எவ்வளவு குறைத்துப் பார்த்தாலும் மாதம் ரூ. 30 அல்லது ரூ. 40-க்குக் குறையாமல் வருடத்திற்கு சுமார் ரூ. 500 நிர்வாகஸ்தர் கைவிட்டுப் போடவேண்டியிருக்கிறது. சென்னை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களில் உள்ள எய்டெட் பாடசாலைகளில் சிலவற்றில் சம்பளம் வசூலாகலாம். ஆனால், அப்படி வசூலாகும் பாடசாலைகள், மாகாணத்தில் கணக்கிட்டால் 100க்கு 10க்கு மேல் இராது. மிகுதியுள்ள 90 பாடசாலைகளின் நிர்வாகஸ்தர்களின் கதியென்ன?

நிச்சயமில்லா நிர்வாகக் கிராண்டு முறையைக் கண்டு பாடசாலைகளை நடத்துவதா? மூடுவதா? என்ற பிரச்சினையில் இப்பொழுது பல நிர்வாகிகள் இறங்கியிருக்கின்றனர்;— தற்போதுள்ள சுதந்திர ஆட்சியில். சுதந்திர ஆட்சிக்கு முன்பு ஆங்கில ஆட்சியில் ஒவ்வொரு பாடசாலைக்கும் 25 சதவிகிதத்திற்குக் குறையாமல் 50 சதவிகிதத்திற்கு அதிகப்படியாக, அந்தந்த நிர்வாகத்தின் திறமைக்குத் தக்கபடி, வருடாந்திர ஆதாரக் கிராண்டில் உயர்த்திக் கொடுத்தனர் கல்வி அதிகாரிகள். அப்படிக் கொடுத்து வந்ததினால் எய்டெட் பாடசாலைகள் ஒன்றுக்கொன்று போட்டி மனப்பான்மையுடன் திறமைக்கான கிராண்டு கிடைக்கும் என்ற எண்ணத்தினால் தீவிரமாகப் பாடசாலைகளைப் பலவகையிலும் சிறப்பாக நடத்தி வந்தனர். அப்படி வருடாந்திரத்தில் மிச்சப்படும் கிராண்டைச் சேர்த்து பாடசாலைக் கட்டடங்களைச் சொந்தமாக வாங்கி, பாடசாலையை விருத்திசெய்தனர். ஆனால், சுதந்திர ஆட்சியிலோ, நிலைமை தலைகீழாக மாறி விட்டது. இனிப் பாடசாலைகளை உற்சாகமாக நிர்வகிப்பதற்கு நிர்வாகிகள் மனம் மாறுபட்டு வருகின்றது.

கல்வியின் முன்னேற்றத்திற்கு உழைக்க ஒருவருக்கு மனம் இருக்கலாம்! அதன் காரணமாக அவர் சரீர சகாயத்தைக் கொடுக்கலாம். ஆனால் அவரே தன் கைப்பணத்தைச் செலவு செய்யும்படி எதிர்பார்ப்போமானால் அது அறிவுடைமையாகாது. பணத்தைத் தாராளமாகச் செலவு செய்ய வேண்டியது அரசாங்கத்தாரின் கடமை.

(54-ம் பக்கம் பார்க்க)

Edited, Printedand Published by P. Veeraraghavan in Venkatesan Press, 94/95 New St. Mannady